விலை ரூபா: 10.00


*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 02 ஞாயிற்றுக்கிழமை (18.11.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 334




## அரசாங்கத்திற்கு அபயம்

# வ.செ.திட்ட வாக்கெடுப்பை புறக்கணிக்க ஜே.வி.பி. முடிவு

(கொழும்பு)

**வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பைப் புறக்கணிக்க ஜே.வி.பி. முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகின்றது. தாம் விதித்த நிபந்தனைகளை ஏற்க மறுத்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும் அதேநேரம் அரசாங்கத்தைக் கவிழவிடாது பாதுகாக்கும் நோக்கிலுமே ஜே.வி.பி. இந்த முடிபை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

ஜே.வி.பியின் இந்த முடிபால் நாடாளுமன்றில் நாளை திங்கட்கிழமை இடம்பெறும் வரவு–செலவுத் திட்டம் மீதான 2 ஆம் நிலை வாக்கெடுப்பு பலப்பரீட்சையில் அரசாங்கம் வெற்றிகொள்வது பெரும்பாலும் உறுதியாகியிருக்கின்றது.

இதேவேளை ஜே.வி.பியின் முக்கியஸ்தர்கள் நேற்றுக் காலை கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் வரவு–செலவுத் திட்டம் குறித்து தமது கட்சியின் நிலைப்பாட்டை வெளியிட்டனர்.

இந்த ஊடக *(08 ஆம் பக்கம் பார்க்க)*

## நவாலியில் நேற்று வர்த்தகர் சுட்டுக்கொலை

(நவாலி)

நவாலி வடக்கு சோமசுந்தரப் புலவர் ஒழுங்கைக்கு முன்பாக நேற்று நண்பகல் 11.15 மணியளவில் வர்த்தகர் ஒருவர் அவரது வர்த்தக நிலையத்தில் வைத்து ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் *(08 ஆம் பக்கம் பார்க்க)*

## ஹலோ ரெஸ்ட் பணியாளர் அத்தியடியில் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஸ்ரான்லி வீதி அத்தியடியில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் ஹலோ ரெஸ்ட் பணியாளர் ஒருவர் ஆயுததாரிகளினால் அவரது வீட்டிற்கு அண்மையாக வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் *(08 ஆம் பக்கம் பார்க்க)*

## ஜனாதிபதியுடனும் ரணிலுடனும் விஜயதாச ராஜபக்ஷ சந்திப்பு

(கொழும்பு)

அரசாங்கத் தரப்பிலிருந்து எதிரணிப் பக்கம் தாவிய நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ மீண்டும் ஆளுந்தரப்புக்கு வந்துவிட்டார் என்று நேற்றைய தினம் பெயர் குறிப்பிட விரும்பாத முக்கிய அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

ஆனால் அந்தத் தகவலை அடியோடு மறுத்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர் ஒருவர், நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ தொடர்ந்தும் எதிரணியிலேயே இருப்பார் எனத் தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்றுக் காலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷவுக்குமிடையில் *(08 ஆம் பக்கம் பார்க்க)*

## ஆளுந்தரப்புக்குத் தாவிய ரட்ணதிலக்கவை எதிரணிக்கு மீண்டும் இழுக்க தீவிர முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ஆளுந்தரப்பிற்கு தாவிய நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ரட்ணதிலக்கவை மீண்டும் எதிரணியில் இணைந்துக் கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இதற்காக நேற்று முன்தினம் மதியம் நாடளுமன்ற உறுப்பினர் மகிந்த ரட்ணதிலக்கவுடன் ஐக்கியதேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மூவர் இரகசியப் பேச்சு வார்த்தையை மேற்கொண்டனர்.

ஹோல் பேஸ் ஹொட்டலில் உள்ள அறை ஒன்றில் வைத்து இந்த இரகசிய சந்திப்பு இடம் பெற்றதாகத் தெரியவருகிறது.

இச் சந்திப்பில் *(08 ஆம் பக்கம் பார்க்க)*

# பங்களாதேஷை தாக்கிய சூறாவளியில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழப்பு

(டாக்கா)

பங்களாதேஷைத் தாக்கிய கடும் சூறாவளியில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டியிருக்கின்றது. இந்தச் சூறாவளியால் பங்களாதேஷின் மத்திய மற்றும் தெற்குப் பகுதிக்ளே அதிகம்

றது. மீட்புப் பணியாளர்கள் தொடர்ந்தும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதுவரை ஆயிரத்து 600 பேர் உயிரிழந்தமை உறுதிசெய்யப்பட்டிருப்பதாக மீட்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதேநேரம் இந்தச் சூறாவளியால்

டைந்துள்ளன. கரையோரங்களை அண்மித்த நூற்றுக் கணக்கான வீடுகள் நீரில் மூழ்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீடுகளிலிருந்தவர்களின் கதி என்னவாயிற்று என்று இதுவரை தெரியவில்லை என்று பங்களாதேஷ் அரசு அறிவித்துள்ளது.

கை மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

சூறாவளியில் பாதிக்கப்பட்ட மக்கள் வீதிகளில் தஞ்சமடைந்துள்ளனர். அவர்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்ள சர்வதேச சமூகம் முன்வந்திருப்பதாக பங்க

பங்களாதேஷைத் தாக்கிய கடும் சூறாவளியில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டியிருக்கின்றது. இந்தச் சூறாவளியால் பங்களாதேஷின் மத்திய மற்றும் தெற்குப் பகுதிக்ளே அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதுவரை ஆயிரத்து 600 பேர் உயிரிழந்தமை உறுதிசெய்யப்பட்டிருப்பதாக மீட்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதேநேரம் இந்தச் சூறாவளியால் ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள் அழிவ கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீடுகளிலிருந்தவர்களின் கதி என்னவாயிற்று என்று இதுவரை தெரியவில்லை என்று பங்களாதேஷ் அரசு அறிவித்துள்ளது. இதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக் சூறாவளியில் பாதிக்கப்பட்ட மக்கள் வீதிகளில் தஞ்சமடைந்துள்ளனர். அவர்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்ள சர்வதேச சமூகம் முன்வந்திருப்பதாக பங்களாதேஷ் அரசு (08 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளைத் தடைசெய்வது குறித்து விரைவில் முக்கிய கலந்துரையாடல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை தடைசெய்வது குறித்து அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் விரைவில் கலந்துரையாட அரச உயர் மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

விடுதலைப் புலிகளை தடைசெய்வது குறித்து ஏற்கனவே கடந்த வாரம் இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டு அது தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இது குறித்தே அரசில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுடன் பேச்சு நடத்த அரச உயர் மட்டம் தீர்மானித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

பெரும் (08 ஆம் பக்கம் பார்க்க)



# மகிந்தவும் ரணிலும் எதிர்பாராத சந்திப்பு

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் பாரியார் எலீனா அம்மையாரின் பூதவுடலுக்கு நேற்று மாலை அஞ்சலி செலுத்தச் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்பாராதவகையில் சந்தித்துக்கொண்டனர்.

நேற்றுக் காலை காலமான எலீனா அம்மையாரின் பூதவுடல் கொழும்பு வோட் பிளேஸிலுள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தது. அரசியல்வாதிகளும் முக்கிய பிரமுகர்களும் அவரது பூதவுடலுக்கு நேற்று அஞ்சலி செலுத்தினர்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது பாரியாரும் நேற்று மாலை எலீனா அம்மையாரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக வருகை தந்தனர். சில நிமிடங்கள் கழித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அங்கு வருகை தந்து எலீனா அம்மையாரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினார். அதன் பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அங்கு அருகருகே அமர்ந்திருந்து சுமார் 20 நிமிடங்கள் வரை அளவளாவினர். (ந-5)

# போர்நிறுத்த உடன்படிக்கையில் இருந்து விலக வேண்டாம் -யப்பான் எச்சரிக்கை

(கொழும்பு)


போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகுவதற்கு எத்தனிக்க வேண்டாம் என இலங்கை அரசாங்கத்தை யப்பான் எச்சரித்துள்ளது. இது குறித்து இராஜதந்திர வட்டாரங்களூடாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு செய்தி ஒன்றை அனுப்பி வைத்திருக்கும் யப்பானிய அரசாங்கம் போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து அரசாங்கம் விலகும் பட்சத்தில் அரசாங்கத்திற்கான நிதியுதவிகளைத் தாம் நிறுத்த நேரிடும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனிடையே தமிழீழ விடுதலைப்புலிகளைப் பயங்கரவாத அமைப்பாக அரசாங்கம் தடை செய்வது சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இடையூறாக அமையும் என அமெரிக்காவும் இந்தியாவும் கருத்து வெளியிட்டிருப்பதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. (ந-5)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

★இந்திரா காந்தியை கொன்ற சீக்கியரை ஒதுக்கி விட்டோமா?

★புலிகளுடன் பேசுமாறு கூறிய ப.சிதம்பரத்துக்கு வழக்கு வைத்தோமா?



# கவிதைக்காக கருணாநிதிக்கு மட்டும் வழக்கு வைப்பது எப்படி நியாயமாகும்?

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி ஆவேசம்

(சென்னை)

ராஜீவ் காந்தியின் மரணத்தை வைத்து ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமையைப் பறிக்க முடியாதென்று தமிழகத்தின் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தெரிவித்துள்ளார். தமிழகத்தில் வெளிவரும் நக்கீரன் இதழுக்கு அவர் அளித்த நேர்காணலின் முழுவிபரம் வருமாறு,

ஒரு படுகொலைக்கு எழுதப்பட்ட இரங்கல் கவிதை தமிழக அரசியலில் கூட்டணி சர்ச்சைகளையும் ஆட்சிக் கவிழ்ப்புக் குரல்களையும் அதிகப்படுத்தியிருக்கின்றது. உணர்வு ரீதியான வெளிப்பாட்டை சட்டம் அனுமதிக்குமா? இந்த உணர்வு கூட்டணியில் பாதிப்பை ஏற்படுத்துமா? என்ற அடிப்படையில் திராவிடர் கழகத் தலைவரும் வழக்கறிஞருமான கி.வீரமணியைச் சந்தித்தோம்.

**நக்கீரன்:-** தமிழ்ச்செல்வனுக்குக் கவிதை நடையில் முதல்வர் தெரிவித்த இரங்கல் தமிழகத்தில் அரசியல் ரீதியாகப் பிரச்சினையாக்கப்பட்டிருக்கின்றது. முதல்வரைச் சூழ்ந்துள்ள புதிய நெருக்கடியை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?

**கி.வீரமணி:-** உலகம்முழுவதுமே அனுதாபப்படக் கூடிய, பட்டுக் கொண்டிருக்கின்ற ஓர் நிகழ்வை, இங்கே துரும்பைத் தூணாக்குவது போல ஆக்கிக் கொண்டிருக்கின்றார்கள். கலைஞர் வெறும் முதல்வர் மட்டுமல்ல. அடிப்படையில் ஒரு தமிழன். அந்த வகையில் உணர்வைக் காட்டியிருக்கின்றார்.

**நக்கீரன்:-** முதல்வர் பொறுப்பிலே இருப்பவர் இந்தியாவில் தடை செய்யப்பட்ட ஒரு இயக்கத்தைச் சேர்ந்தவரின் மறைவுக்காக வெளிப்படுத்தும் தனிப்பட்ட உணர்வுகளைத் தமிழக அரசின் செய்திக் குறிப்பாக எப்படி வெளியிட முடியுமென நீதிமன்றத்தில் வாதிடவும் தயாராகி வருகின்றார்களே?

**கி.வீரமணி:-** தமிழக அரசின் செய்தித் துறை சார்பில் சாதாரணமாக அனுப்பியிருக்கின்றார்களே தவிர, அவருடைய உணர்வு என்பது அரசாங்க ரீதியாகவோ, அமைச்சரவை கூடியோ எடுக்கப்பட்ட முடிபல்ல. இதனால் இறையாண்மைக்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

**நக்கீரன்:-** முதல்வர் எழுதிய இரங்கல் கவிதை உணர்வு ரீதியாகச் சரியாக இருக்கலாம். சட்டத்தின் பார்வையில் சரியாக இருக்குமா? சட்டம் இதை அனுமதிக்குமா?

**கி.வீரமணி:-** பிரதமரே காஷ்மீரில் தடை செய்யப்பட்ட இயக்கங்களுடன் சமாதானம் பேசுகின்றார். நாகலாந்தில் தடை செய்யப்பட்ட இயக்கங்களைச் சேர்ந்தவர்களை வெளிநாட்டிருந்து அழைத்து வந்து முன்னாள் உள்துறைச் செயலாளர் பத்மநாபா பேசினார். மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் இலங்கைக்குச் சென்றார். ராஜபக்ஷவுடன் பேசினார்.

அப்பொழுது, விடுதலைப்புலிகளை அழைத்துப் பேசுங்கள் என்று நிதியமைச்சர் சொல்லியிருக்கின்றார். புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட இயக்கம். சிதம்பரம் இந்தியாவின் நிதியமைச்சர். இந்நாட்டின் சார்பாக இலங்கைக்குச் சென்ற அவர் தடை செய்யப்பட்ட ஓர் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு அந்நாட்டு ஜனாதிபதியிடம் சொல்கின்றார் என்பதற்காக அவர் மீது வழக்குப் போட முடியுமா? கலைஞரின் கவிதையை விடவும் இது ஆழமான விடயம்.

ஆனாலும் அவர் மீது வழக்குப் போட வேண்டும் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். காரணம் அவரது இந்தப் பேச்சு ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையிலானது. முதல்வரின் கவிதையும் மனிதாபிமானம் அடிப்படையிலானது. இது குறித்து வழக்குத் தொடர்ந்தால் நீதிமன்றம் இதை அனுமதிக்கும் என்று தோன்றவில்லை.

**நக்கீரன்:-** விடுதலைப்புலிகளுடன்பேச்சுவார்த்தை என்று மத்திய நிதியமைச்சர் வலியுறுத்தினாலும் மற்றொரு மத்திய அமைச்சரான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் குரல் கடுமையாக ஒலிக்கின்றதே? தமிழ்ச்செல்வனுக்காக முதல்வர் எழுதிய கவிதையும் தமிழகத்தில் இடம்பெற்ற இரங்கல் கூட்டங்களும் காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் கூட்டத்தில் கடுமையாகக் கண்டிக்கப்பட்டிருக்கின்றதே?

**கி.வீரமணி:-** காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை அவரவருக்கு தோன்றுவதை சொல்லாம் என்ற நிலைமைதான் இருக்கின்றது. தமிழக காங்கிரஸில் பல குழுக்கள் இருப்பதை அவர்களே ஒப்புக் கொள்கின்றார்கள். இவர்களில் அ.தி.மு.க. ஆதரவு காங்கிரஸாரும் இருக்கின்றார்கள். இது பற்றிப் பொருட்படுத்த வேண்டியதில்லை.

காங்கிரஸ் கட்சியின் அகில இந்தியத் தலைவர் சோனியா காந்தியின் முடிபுதான் முக்கியம். அவர் இதுவரை இந்தப் பிரச்சினை குறித்து எதிராக எதுவும் சொல்லவில்லை. காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடிய போதும் இதுபற்றிப் பேசவில்லை. அதனால் கூட்டணிக்கு எவ்விதப் பாதிப்பும் இல்லை.

தலையிருக்க வால் ஆட வேண்டிய அவசியமில்லை. வால், தலைமையை நிர்ணயிக்க முடியாது. மத்திய அமைச்சர் இளங்கோவன் பேசியிருப்பது அவரது தனிப்பட்ட குரல்தான். அதற்கு தனிப்பட்ட காரணங்களும் உண்டு.

**நக்கீரன்:-** கூட்டணிக் கட்சியின் ஆதரவுடன் தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் அக் கட்சிகளிடமிருந்து மாறுபாடான கருத்துக்கள் வெளிப்படும் வகையில் உணர்வு பூர்வமான விடயங்களைத் தொட வேண்டியது அவசியமா?

**கி.வீரமணி:-** ஈழத் தமிழர் பிரச்சினைக்கு அறவழியிலேயே ஆதரவு கொடுப்பது தவறல்ல. தமிழர்களின் பல்வேறு பிரச்சினைகளில் இதுவும் ஒன்று. அதற்குரிய வகையில் கவனம் செலுத்தப்பட வேண்டும். ஆனால் இதைச் சில சக்திகள் விரும்புவதில்லை. அவர்கள் ராஜீவ் காந்தி மரணத்தை முன் வைத்து, அதை திசை திரும்பப் பார்க்கின்றார்கள். அந்தக் கொலையை நாம் ஆதரிக்கவில்லை. அது தவறு என்று கண்டிக்கின்றோம். ஆனால் அதை மட்டுமே காரணம் காட்டி ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமையைப் பறிக்க முடியாது.

இந்திரா காந்தி அம்மையாரை சீக்கியர்கள் கொன்றார்கள் என்பதால் அவர்களைப் புறக்கணித்து விட்டோமா? இன்றைக்கு ஒரு சீக்கியர் தானே பிரதமராகவிருக்கின்றார். காந்தியைக் கொன்ற கோட்சே கும்பல் தான் இந்தியாவில் ஆட்சிக்கு வந்தது. மீண்டும் வர வேண்டும் என்கிறது.

இத்தகைய உதாரணங்களைப் பார்க்க வேண்டும். ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமைக்கு எந்தவகையில் உதவுவது என்பதைப் பார்க்க வேண்டும்.

**நக்கீரன்:-** முதல்வருக்கு எதிராகத் தோன்றியுள்ள புதிய நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கும் வழக்குப் போட்டால் அதை எதிர்கொள்வதற்கும் திராவிடர் கழகம் எந்த வகையில் உதவும்?

**கி.வீரமணி:-** முதல்வர் அவர்களுக்கு எதை, எப்போது, எப்படிச் செய்ய வேண்டும் என்பது தெரியும். இந்தியாவிலேயே மூத்த அனுபவம் மிக்க தலைவர் அவர். அவருடைய ஆட்சிக்குத் திராவிடர் கழகம் காப்பாளனாகவிருக்கும். இது எங்கள் கடமை. தி.கவுக்கும் தி.மு.கவுக்குமானது தோழமை அல்ல உறவு. தள்ளியிருந்தாலும் கூட உறவு உறவு தான். அது எப்போதும் நீடிக்கும் என்று அதில் கி.வீரமணி தெரிவித்துள்ளார். (ந-5)

# ஈழ மக்களின் தாயகக் கனவு நிறைவேற தமிழகமும், இந்தியாவும் துணையாக இருக்க வேண்டும்

## ஜூனியர் விகடனுக்கு பா.நடேசன் பேட்டி

(சென்னை)

எமது மக்களின் நீண்டகால விடுதலைப் போரின் நியாயங்களை புரிந்து கொண்டு ஈழ மக்களின் தாயகக் கனவு நிறைவேற துணையாக இருக்க வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழகத்தில் இருந்து வெளிவரும் ஜூனியர் விகடனுக்கு மின்னஞ்சல் மூலம் பா.நடேசன் அளித்துள்ள பேட்டியில்,

*தமிழீழ விடுதலைப் புலிகளின் புதிய அரசியல் பிரிவு தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார் பா.நடேசன். ஈழ விடுதலைப் போர் வரலாற்றில் நீண்டகால அனுபவம் பெற்றவரான நடேசன் புலிகளின் காவல்துறைப் பொறுப்பாளராக பணியாற்றியவர். அன்ரன் பாலசிங்கம், தமிழ்ச்செல்வன் ஆகியோரின் மறைவுக்கு பின் முக்கியத்துவம் வாய்ந்த இந்த இடத்திற்கு வந்திருக்கும் நடேசன் சர்வதேச அளவில் புலிகளுக்காக எப்படிப் பங்காற்றப்போகிறார் என்ற கேள்வியோடு அவரை மெயில் மூலமாக பேட்டியெடுத்தோம்.*

**கேள்வி:** தமிழ்ச்செல்வனின் படுகொலை புலிகள் அமைப்பிலும் ஈழமக்களிடமும் என்னவிதமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது?

**பதில்:** தமிழ்ச்செல்வன் எமது போராளி அமைப்பின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர். ஒரு படைத்தளபதியாக மட்டுமன்றி அரசியல் துறைப் பொறுப்பாளராகவும் இராஜதந்திரியாகவும் செயற்பட்டார். அவரது இழப்பு எமக்கு பெரும் சோகத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது. அவர் மக்களை எவ்வளவு நேசித்தார் என்பதும் மக்கள் அவரை எவ்வளவு நேசித்தார்கள் என்பதும் உலகெங்கும் அவருக்காக நடந்த அஞ்சலிக் கூட்டங்களில் வெளிப்பட்டது.

ஈழத்தில் அவரது இறுதிச் சடங்கில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டபோது இலங்கை இராணுவ விமானங்கள் பறந்து அச்சுறுத்தின. ஆனால் அதற்கு அஞ்சாமல் தமிழீழ மக்கள் அந்தத் தளபதிக்கு வீரவணக்கம் செலுத்தினார்கள்.

தமிழ்ச்செல்வனின் கொலை எங்கள் விடுதலைப் போராட்ட வரலாற்றில் மறக்க முடியாத ஒரு நிகழ்வு.

**கேள்வி:** அநுராதபுரம் இராணுவத் தளம் தாக்கப்பட்டதால் ஏற்பட்ட 700 கோடி ரூபாய் இழப்பால் விளைந்த கோபம்தான் தமிழ்ச்செல்வன் படுகொலைக்கு காரணம் என்று எடுத்துக் கொள்ளலாமா?

**பதில்:** இலங்கை அரசு தொடர்ந்து நடத்தி வரும் தமிழின அழிப்பின் ஒரு பகுதியே தமிழ்ச்செல்வன் கொலை. அநுராதபுரம் விமானப் படைத்தள தாக்குதல் நடத்தப்படாவிட்டாலும் இப்படியான கொலைகளை அரசு செய்யும். அதன் இனவெறி வரலாற்றில் இதற்கு பல எடுத்துக்காட்டுக்களில் சொல்ல முடியும்.

**கேள்வி:** தமிழகத்தில் உங்களை ஆதரிப்பவர்கள் பல குழுக்களாக சிதைந்து கிடக்கிறார்களே?

**பதில்:** தமிழகத்திலுள்ள பல்வேறுபட்ட அரசியல் கட்சிகள் எங்களை ஆதரிக்கின்றன. எங்களைப் பொறுத்தவரை தமிழகத்தின் ஆறரைக் கோடி மக்களும் எமது ஈழ விடுதலைப் போரின்பால் அக்கறையும் ஆதரவும் கொண்டவர்களாகவே இருக்கின்றனர். எவ்வளவுதான் கருத்து வேறுபாடு இருந்தாலும்



ஈழத்தமிழர் போராட்டம் என வரும்போது உணர்வால் ஒன்றுபட்டே நிற்கிறார்கள்.

**கேள்வி:** தமிழ்ச்செல்வனுக்கு தமிழக முதல்வர் இரங்கல் கவிதை எழுதினார். அந்தக் கவிதை ஈழத்தமிழரிடம் வரவேற்பையும் தமிழகத்தில் சர்ச்சையையும் உருவாக்கியிருக்கிறதே?

**பதில்:** தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் கவிதை வரிகள் தமிழகத்தின் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் உணர்வுகளை பிரதிபலிப்பதாக இருந்தது. எங்கள் காயங்களுக்கு களிம்பு தடவுவதாக இருந்த அந்தக் கவிதைக்கு ஈழத்தமிழர்கள் நன்றிக் கடன் பட்டிருக்கிறார்கள் (08 ஆம் பக்கம் பார்க்க)

# எண் சோதிடம்

**எண் 4 தொடர்ச்சி**

**எழுத்து -நான்கு**

பெயரில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக் கைகளைக் கூட்டிக் கண்ட தொகை நான்கா னால் அப்பெயர் நான்கின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதாகும். தனித் தனியாக 4 வரக்கூடிய பெயர் எண்ணிக்கைகளின் பலன்களைக் கீழே காண்க.

4. சிறு பெயராக 4 வரும்படியாக இருந் தால் அது வியாபகமான மனிதரையோ பொரு ளையோ குறிப்பதாகும். புகழுக்கேற்ற அதிர் ஷ்டம் இருக்காது. வீண் பயங்கள் இருந்து கொண்டே இருக்கும். நோயும், எதிர்ப்பும் இருக்கும். எல்லாம் தெரிந்தவராக இருந்தும் பிறர் சொல்லுக்கு அடங்கியே வாழ நேரும்.

13. மேல் நாட்டினர் இப் பதின்மூன்று என் னக் கண்டு மிகவும் அஞ்சுகின்றனர். ஹோட்டல்களிலும் 13 ஆம் நம்பர் அறைக்கு ஒருவரும் வரமாட்டார்கள். பிரசித்தமான விடுதிகளில் இவ்வெண் கொண்ட அறை காணப்படுவதே இல்லை.

இப் பெயரின் பலனை அறிய இதிகாச புருஷனும் தெய்வமுமான ஸ்ரீராமனே சரியான உதாரணமாகும். தான் விரும்பாவிடினும் வாழ்க்கையில் பலரைத் தண்டிக்க நேரும். எதிர்பாராத சம்பவங்கள் (துயரமளிப்பவை) அடிக்கடி நிகழும். ஸ்திரீகளால் கவலையும், கஷ்டமும் ஏற்படும். மேலான அந்தஸ்துக்கு வாழ்க்கை உயர்ந்தாலும் சதா கவலையும் சஞ்சலமும் உள்ளதாக இருக்கும். இது விரும் பத்தக்க எண்ணல்ல.

22. இருபத்தி இரண்டாம் திகதி பிறந் தோருக்குக் கூறியிருக்கும் பலன்களையே இப் பெயருக்கும் கொள்ளலாம். இது உணர்ச் சிகளை அதிகம் தூண்டிவிடும். பந்தயங்கள், போட்டிகள்,குடி,போகங்கள் இவைகள் ஏதாவ தொன்றிலோ, எல்லாவற்றிலுமோ மனம் தீவிர நாட்டங்கொள்ளும். சூதாட்டங்களில் துணிந்து இறங்கி விடுவார்கள். பொருளை யெல்லாம் இழக்கக் கூடிய சந்தர்ப்பங்களை நோக்கி விரைவர். துர்மந்திரிகளால் சூழப் பட்டும் காணப்படுவதுண்டு. (ஆனால் இவர் கள் பிறர் சொற்படி நடப்பவர்களல்லர்). பிறந்த திகதி எண்கள் நன்றாக இருந்தால் வெற்றி கிட்டும். இல்லையேல் முழுத்தோல்வி அடை யாமல் சமாளித்துக் கொள்வர். சுயநலக்காரர் கள் இவர்களை சதா தூண்டிக் கொண்டிருப்பர். சிறந்த நிர்வாகிகளாகவும் உயர்ந்த முறை யில் தொழிலமைப்பார்கள்.

எந்தக் கஷ்டம் வரினும் கலங்காமல் சமாளித்துக் கொள் வார்கள். அபகீர்த்தியும் ஏற்படுவது சகஜமே.

31 இவர்களுக்கு லாபம் நஷ்டம் என்ப தில்லை. சுதந்திரமே இலட்சியமாக இருக்கும். என்ன நன்மை வருவதானாலும் மனதிற்குப் பிரியமில்லாத காரியத்தில் ஈடுபடமாட்டார்கள். மனோவசியம், ஜோதிடம், வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களில் ஈடுபாடு உண்டாகும். வேதாந் தியைப் போல எதையும் இலட்சியம் பண்ணா மல் வாழ்வர். காரிய சித்தியை தந்தபோதி லும் இவர்களுக்கு வெற்றி மகிழ்ச்சி தருவ தில்லை. வெற்றி கிட்டின போதும் அதனால் பயனடையாமல் விட்டுவிடுவார்கள்.

31ஆவது வயதில் எல்லாவற்றையும் துறக்க அல்லது இழக்கக் கூடிய சந்தர்ப் பங்கள் ஏற்படும், பின்னர் 37 வயதளவில் தான் மீண்டும் பழைய நிலையை அடைவர். எதிர்பாராத நிகழ்ச்சிகள் வாழ்க்கையைப் பாதிக் கும். முடிவும் மிக்க எதிர்பாராத விதமாகவே திடீரென வரும். (ஆனாலும் இவர்கள் தன் முடிவை சூசகமாக உணர்வார்கள்). பிறந்த திகதி 1 எண்ணிக்கையுடையதாக இருந்தால் மாத்திரம் பெரும் பதவிகள் கிட்டும்.

40. எதிர்பாராத நண்பர்களையும், அதனால் பெரிய அந்தஸ்தையும் அதிகார உத்தியோ கத்தையும் இவ்வெண் அளிக்கவல்லது. புகழும் பட்டங்களும் உண்டு. விஷேச ஆபரண சேர்க்கையும்,சொத்துக்களும் ஏற்படும். ஆனா லும் இவர்களது தீய குணங்களே எல்லோ ருக்கும் நன்கு புலப்படும். துணிந்து எக் காரியத் தையும் சாதிக்க வல்லவர்கள். வாழ்க்கையும் முடிவில் பிரயோசனமற்றதாகிவிடும். சமூகம் தன் சேவைகளை உணரவில்லை எனக் கூறுவர்.

49. இவ்வெண் பெயராக வந்தால் வாழ்க் கையில் செல்வம் நீர்வீழ்ச்சி போல் வரும். பிரமிக்கத் தகுந்த காரியங்களைச் செய்ய லாம். புயல்போல வேகத்துடன் புகழ் பரவும். வாழ்க்கை சம்பவங்கள் நிறைந்ததாக இருக் கும். பிரயாணங்கள் ஏராளமாக ஏற்படும். பல அபூர்வ அனுபவங்கள் ஏற்படும் நிலையான சொத்துக்கள் கிடைக்கும். திடீரென அதிர்ஷ்ட மடிக்கும். விபத்துக்களும் அப்படியே எதிர்பா ராதபடி வரும்.பிறந்த திகதி எண்கள் நன்றாக இருந்தால் அதிர்ஷ்டகரமானதாக இருக்கும். அப்படி இல்லாவிடல் இப்பெயர் உடையவர் பிறரால் வெறுக்கப்பட்டு கோரமான முடிவை அடைவர். கற்பனையைத் தூண்டிவிடும் எண்.

**பண்டிட் ஸேதுராமன்**

58. இவ்வெண் மிக்க பிரசித்தியையும் வசீகரத்தையும் தரும். காரியசித்தி ஏற்படும். வாழ்க்கை வேகமாக முன்னேறும். ஆசார சீல ராகவும், மனிதாபிமானமுள்ளவராகவும் ஆவர். சீர்திருத்த நோக்கங்கள் மிகும். பிறந்த திகதி எண்கள் 4 அல்லது 8 ஆக இருந்தால் புகழுடன் பொறுப்பு வாய்ந்த பெரிய பதவி களை வகிப்பர். விரும்பத்தகாத காரியங்க ளைச் செய்ய நேரும். மனதில் ஏதாவது பயமிருக்கும். அதிர்ஷ்டகரமானதாகவே தோன்றும். வேறு எண்களில் பிறந்தவர்கள் இவ்வெண் குறிக்கும் பெயர் கொண்டால் மேல் நோக்கிச் சென்ற வாழக்கை படிப் படியாக



இறங்கிவிடும். பிரபலம் குறைந்து போகும். சுயநலம் மிக்க வாழ்க்கை வாழ்வர். பல கஷ் டங்களையும் அனுபவிக்க நேரும்.

67. இவ்வெண்ணால் குறிக்கப்படுவோர் சிறந்த கலைஞராகவும் சலியாத உழைப்பா ளியாகவும் இருப்பர். மிக்க மேலான நிலை யில் உள்ளவர்களது ஆதரவு கிட்டும். உயர்ந்த கற்பனைகளை வெளியிடுவர். ஸ்திரீ பிரமை ஏற்படாமல் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அன்பும் தூய்மையும் இவர்களை மேலோ ராக்கும். அருளும் எளிதில் கிட்டும். சுயநல மான காரியங்களை முயற்சித்தால் சரியாக முடி யாது. மிக்க வசீகரத்தைத் தரும் இவ் வெண் கலைஞரல்லாதாருக்குப் பயனளிக் காது.

76. இவ்வெண் பெயரில் உடையவர் திடீரென எல்லாப் பொருளையும் இழக்க நேரும். பிரபலமான சூழ்நிலையில் வாழ்வர். பரோபகாரமான பொதுக் காரியங்களில் வெற்றி ஏற்படும். அதிசயப்படும் படியான புது முறைகளில் செல்வம் சம்பாதிப்பார்கள். அருள் உண்டாகும். அருளைப் பொருளாக் கிவிடுவார்கள். பின் வயதில் என்ன செய்வ தென்று தெரியாமல் உண்டு உறங்கி வாழ் நாளைக் கழிப்பர்.

85. கஷ்டப்பட்டு முன்னேறுபவரை இவ் வெண் குறிக்கிறது தீமைகளை வெல்வர். பிறர் கஷ்டங்களையும் அன்புடன் நீக்குவர். மதம், இயற்கை சம்பந்தமான புதுக் கருத்துக் களை வெளியிடுவர். வைத்தியத் தொழிலாலும் பிரசித்தராவர். எல்லோராலும் வணங்கப்படும் பதவி ஏற்படும்.

# திருச்சிலுவைக் கன்னியர்களின் சுகநல நிலையப் பணியின் வெள்ளிவிழா

சுவிற்ஸ்லாந்து நாட்டின் மென் சிங்கன என்ற இடத்தைச் சார்ந்த திருச்சிலுவைக் கன்னியர் யாழ் மறை மாவட்டத்தில் பணிபுரிவதற்காக அதி. வந்தனைக்குரிய ஆயர் ஜோண். அல் பிறட் கியோமர் அவர்களின் அழைப்பை ஏற்று இந்தியாவில் இருந்து 1930ல் தமது பணியை அரச வைத்தியசாலை யில ஆரம்பித்தனர்.

இப் பணியைப் பின்னர் யாழ் அரசினர் பொது வைத்தியசாலையின் நிர்வாகத் தின கீழ் தொடர்ந்து நடாத்தி வந்தனர். அதே சமயம் கொழும்புத் துறையிலுள்ள புனித வளனார் முதி யோர் இல்லத தையும் அவர்கள் பொறுப்பேறறனர்.

கன்னியர்களின் தாய்மடம் யாழ். கடற்கரை வீதியில் விஸ்தரிக்கப்பட்டு, சுதேசிகளை இறையழைத்தலுக்கு உருவாக்கும் பணியினையும் மேற் கொண்டனர். மேதகு ஆயர்.கியோமரை தொடர்ந்து பணியேற்ற மேதகு ஆயர் ஜெறோம எமிலியானுஸ் பிள்ளையவர் கள் இதில் தன் மேலான அக்கறையைச செலுத்தி இலங்கையில் ஒரு புதிய மாகாணத்தையும் மாகாணத் தலை வியையும் உருவாக்க வழிவகுத்தார். இந்த வகையில் அருட் செல்வி அலோ ஷியா றூஸ்லி முதல் மாகாணத் தலை வியானார்.

அரச பொது வைத்தியசாலை களில அருட்கன்னியர்கள் சேவை செய்வதை 1963ல் அரசாங்கம் நிறுத்தி யதையடுத்து ஆயரவர்கள் கன்னியரை கொழும்பு புனித. மைக்கல்ஸ் வைத்தி யப்பணிமனைகளில் பணிசெய்ய வழி காட்டினார். அருட்சகோதரி அலோசியா வைத் தொடர்ந்து சுதேச மாகாணத் தலைவியாக அருட்சகோதரி யசிந்தா மரியாம்பிள்ளை தெரிவு செய்யப் பட்டார். 1982ஆம் ஆண்டு பங்குனி மாதம் 19ம் திகதி ஆயர் மேதகு தியோகுப் பிள்ளை ஆண்டகை அவர்களால் மாகா ணத தலைவி அருட்சகோதரி யசிந்தா, அருட் சகோதரி எட்முண்டா மற்றும் அருட்சகோதரிகள் முன்நிலையில் திருச்சிலுவை சுகநலபணிமனைக் குரிய அடிக்கல் நாட்டப்பட்டது. அதே ஆண்டு கார்த்திகை 17ம் திகதி அருட்சகோதரிகள் எட்முண்டா, இசபெல் ஆகியோரின நேரடிக் கண்காணிப்பிலும் முயற்சியி லும் திருச்சிலுவை சுகநல நிலையப் பணி நிறைவுற்று மேதகு ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை யால் திறந்து வைக்கப்பட்டது.

வடக்கிலுள்ள மக்களின் குணமாக் கலுக்கான நம்பிக்கையின் அடையாள மாக இந்த வைத்திய நிலையம் விளங் கியது.

மதிப்புகுரிய அருட்சகோதரி Dr. இமாகுலேற் யோசப் 1983இல் நோயாளர் களைப் பொறுப்பேற்றார். நோயாளர் களின் உள்ளத்தை தொடும் அளவுக்கு அவரது குணமாக்கும் பணி அமைந் தமையால் பெருந்தொகையானவர்கள் எமது நிலையத்திற்கு ஈர்க்கப்பட்டார் கள்.

வேறு வைத்திய ஆலோசகர் களும் தம் சேவையை எமக்கு வழங்கினர். 40 படுக்கைகள் அடங்கிய எமது சிறிய வைத்தியசாலை படிப்படியாக நிர்வாகத் திறமையுடனான உறுதியுடன் செய லாற்றிய அருட்சகோதரிகள் மற்றும் வைததியர் பணியாளர்களின் சேவை யால் கடந்த 25 வருடங்களாகத் செயற் பட முடிந்தது. நிரந்தரமற்ற அரசியல் சூழ்நிலை, இனக் குழப்பங்களால் பாதிக்கப்படட நிலையிலும் கூட எமது நிலையப் பணியைத் தொடர்ந்து நடத்த முடிந்தது. எவ்வேளையிலும் நாம் இறைவனின் பாதுகாப்பையும், பராமரிப் பினையும் உணர்ந்தோம்.

1995இல் பெரும் திரளான மக்களின் இடப்பெயர்வின் போது நாமும் எம்மால் கொண்டு செல்லக கூடிய பொருட் களுடன் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட் டோம். இக்கால கட்டத்தில் பெறுமதி வாய்ந்த வைத்திய உபகரணங்களை இழக்கநேரிட்டது. ஆயினும் கடவுளின் துணையாலும் எமது சகோதரிகள், நலன விரும்பிகளது சளைக்காத முயற்சியி னாலும் எமது சுகநலநிலையம் தனது சேவையினைத் தொடர்ந்தது. இவ் விடத்தில் 1996ல் அருட் சகோதரி கிரேஸ் அந்தோனிப்பிள்ளை அவர்கள் மற்றைய அருட்சகோதரிகளுடனும் பணியாளர்க ளுடனும் இவ் வைத்திய மனையை மீளவும ஒழுங்கமைக்க ஆற்றிய சேவை யை நன்றியுடன் நினைவுகூர்கின்றோம்.

2000ஆம் ஆண்டில் மீண் டும் ஒரு தடவை சில்லாலைக்கு இடம்பெயர நேரிட்டது. அங்கிருந்து வெவ்வேறு இடங் களுக்கு வெவ்வேறு விதங்களில் இதன் சேவை விஸ்தரிக்கப்பட்டது. மின்சாரம் இல்லாத அக்காலகட்டத்தில் அதிகளவு எண்ணிக்கையில் புதிதாகப் பிறந்த குழந்தைகள் மண்ணெண்ணெய் விளக்கு ஒளியிலேயே இவ்வுலகினைக் காண முடிந்தது

நடமாடும் மருத்துவ சேவையிலீடு பட்டவர்கள். தூர இடங்களுக்கும். பின்தங்கிய கிராமங்களுக்கும் சென்று இடம்பெயர்ந் தவர்களின் இழப்பிலும், வேதனையிலும் தாமும் ஒருவராகப் பங்குகொண்டனர். அருட்சகோதரி எட்முண்டா பவரின் கனவாக இருந்த இந நிலையக் கட்டிட, விஸ்தரிப்பு அதற் குரிய நிதி, திட்டம், என்பன கையி லிருந்தும் அவரின் கனவு இன்று வரை உணரப்படவில்லை. பல பகுதிகளில் இருந்தும் பல சவால் களுக்கு முகம் கொடுத்த அருட் சகோதரி இமாகுலேற் ஜோசப் (மாகாணத் தலைவி) அவர் களின் தளராத முயற்சியினாலும், துணிச்சலினாலும் இன்று நிறைவேறி யுள்ளது.

இப்பணி நிறை வடைய தமது கடின உழைப்பை பல வழிகளிலும் வழங்கிய அனைத்து அருட்சகோதரி களையும் நினைவு கூர்கின்றோம். விசேட விதமாக இப்பணிக்கு கடுமை யாக உழைத்த அருட் சகோதரிகள் லூசியா ஜோசப், கிளேயா சுவானி ஆகியோர் குறிப்பிடத தக்கவர்கள்.

இத் தருணத்தில் யாழ் மண்ணில் 25 வருட யூபிலி நினைவு கூறும் ஹோலிக்கிராஸ் அங்கமாகிய நாம் சிலுவையின் வழி பின் சென்று யேசுக் கிறிஸ்துவில் சங்கமிக்க புதுவசந் தத்தை நோக்கிய புரட்சிப் பாதையில் நம் சுவடுகளை பதிக்கின்றோம்.

## ‘சேக்கிழார் விழாவும் சைவ மாநாடும்’

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களம் யாழ்.மாவட்டத்தில் நடாத்தும் ‘சேக் கிழார் விழாவும் சைவமாநாடும்’ இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் மாவட்ட இணைப்பாளர் கே. தேவேந்திரன் தலைமை யில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அரசாங்க அதிபர் கே. கணேஷும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் கலாநிதி மா.வேத நாதனும் வாழ்நாட் பேராசிரியர் பொ.பால சுந்தரம்பிள்ளையும் கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் கலந்து கொள்வர்.

வரவேற்புரையை அபிவிருத்தி உதவி யாளர் சு.உதயபாலனும் ஆசியுரையை நல்லை ஆதின முதல்வரும் வாழ்த்துரையை வாழ்நாட் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள் ளையும் வழங்குவர். மாநாட்டில் ‘தெய்வப் புலமை சேக்கிழார் பெருமான்’ எனும் விடயத் தில் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜாவும், ‘ஆலயங் களில் ஏற்படும் பிணக்குகளும் தீர்வுக்கான வழிமுறைகளும்’ எனும் விடயத்தில் யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி மு.திருநாவுக் கரசும், ‘சைவசமயம் மீண்டும் மலர்ச்சிபெற’ எனும் விடயத்தில் பல்கலைக்கழக இந்துநாக ரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி கலைவாணி இராமநாதனும், ‘அற நெறிக் கல்வியின் அவசியம்’ எனும் விடயத் தில் கு.பாலசண்முகமும் உரையாற்றுவர்.

இதனைத்தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள், சேக்கிழார் விழா தொடர்பான போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டியோருக்கான சான்றி தழ் மற்றும் பரிசில் வழங்குதலும் இடம் பெறும்.

நன்றியுரையை அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் வழங்குவார். (அ)

**காவலன்**


# பிள்ளையான் போட்டியிடுவார்

கிழக்குப் பகுதியில் அமைந்திருந்த கருணா அம்மானின் அரசியல் அலுவலகத்தை பிள்ளை யான் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தி ருப்பது அரசியல் பிவேசத்தினை நோக்கமாகக் கொண்டுதான் எனப் பிள்ளையான் தரப்பிலி ருந்து வெளிவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கருணாஅம்மான் மற்றும் அவரது குழுவி னர் செல்லும்பாதை கிழக்குப் பகுதி மக்களுக்கு பொருத்தமானதாக இல்லை. கருணா அம்மானை சூழ உள்ளவர்கள் சகலரும் விடுதலைப்புலிகள் கொண்டுள்ள கருத்துக்களையே கொண்டுள்ளனர் என பிள்ளையான் தரப்பினைச் சேர்ந்த பேச்சா ளார் ஒருவர் தெரிவித்தார்.கருணா அம்மானுடன் விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து தாம் விலகியதற்கான முக்கிய காரணம் வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு அரசியல் தீர்வினை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தி லேயே ஆனால் கருணா அம்மானின் தரப்பினர் விடுதலைப் புலிகளைப் போன்றே மக்களை அச்சுறுத்தி கப்பம்பெற்று வந்ததால் கட்சிக்குள் ளும் பெரும் பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள் ளன.அரசியல் ரீதியில் நுழைந்த கருணா அம்மா னின் குழுவினர் புலிகளைப் போன்று மக்களைத் துன்பப்படுத்தி வந்தமையாலேயே பிள்ளையான் கிழக்குப் பகுதியைதனது கட்டுப்பாட்டின் கீழ் வருவ தற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தார். எதிர் வரும் காலங்களில் பிள்ளையான் அரசியலில் நுழைந்து தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பினூடாக போட்டியிட தயாராகவிருப்ப தாகவும் மேற்படி பேச்சாளர் தெரிவித்தார். (அ-5)

# தேவையான பந்து வரும் வரை காத்திருக்கும் மார்வன்

இலங்கை கிரிக்கெற் வரலாற்றில் மார்வன் அத்தபத்துவுக்கு என்று ஒரு தனியிடம் உள்ளதை எவராலும் மறுக்க முடியாது. அவர் ஆடுகளத்தில் இருக்கும் போது தனக்கு தேவையான பந்து வரும்வரை எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் துடுப்பை வைத்துக் கொண்டு காத்திருப்பார். இத



னால் தான் மார்வன் அத்தபத்துவால் டெஸ்ட் போட்டிகளில் நீண்ட நேரம் நிலைத்திருக்க முடிந்தது. அவர் பெரும்பாலும் போட்டிகளின் போது தவறான திசைகளில் துடுப்பை சுழற்றமாட்டார். இந்த வரைவிலக்கணம் மார்வன் அத்தபத்து ஆடுகளத்தில் இருக்கும் போது மாத்திரம் பொருந்தாது. அவரது ஒரு தசாப்த கால சர்வதேச கிரிக்கெற் வாழ்க்கையில் செயற்பாடுகள் அனைத்தும் இவ்வாறுதான் அமைந்திருந்தன. அவர் அணியில் சோபிக்காத நிலையில்; அணித் தலைவராக இருந்த போது, காயங்கள் ஏற்பட்டபோது; ஏன்! தான் அணியிலிருந்து புறக்கணிக்கப்பட்டபோது கூட தனக்கு தேவையான பந்து வரும் வரை காத்திருந்தார்.

இதன் காரணமாகவே அவர் அணியிலிருந்து வேரறுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது அவரால் மீண்டும் அணிக்கு திரும்ப முடிந்தது. ஆனால் இவ்வளவு காலமும் சரியாக துடுப்பை சுழற்றிய மார்வன் அத்தபத்து கடந்த 10 ஆம் திகதி தவறான திசையில் தனது துடுப்பை சுழற்றியதாக விமர்சகர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். தற்போது இலங்கை கிரிக்கெற் அணி சரியான திசையில் போகாமல் தவறான பாதையில் சென்று கொண்டிருக்கிறது. குறிப்பாக இதற்கு காரணம் பொம்மைகள் போன்ற தேர்வாளர்கள், கோமாளி தலைமையில் செயல்படுவது தான். அணிக்கு வீரர்கள் தேர்வு செய்யும் விதம் முறையானதாக இல்லை. தேர்வாளர்கள் முறையாக தேர்வு செய்திருந்தால் சிறந்த பின் வரிசை வீரர்களை உருவாக்கி இருக்க முடியும். தவறான தேர்வால் தற்போது 37, 38 வயதுக்குபிறகே வீரர்கள் இலங்கை அணிக்கு ஆட வரும் நிலை உள்ளது.

தேர்வாளர்கள் வெளி நாட்டுக்கு பயணம் செய்வதை கவனத்தில் கொண்டு செயல்பட்டு தங்கள் நேரத்தை வீணடிக்கிறார்கள். இலங்கை அணி வீரர்கள் ஓய்வறையில் மகிழ்ச்சியாக இருக்கிறோம். நாங்கள் ஒற்றுமையுடன் உள்ளோம். எங்களுக்குள் எந்த பிரச்சினையும் இல்லை.

ஆனால் ஒரு சிலர் நாங்கள் பிளவு பட்டிருப்பது போல் சித்திரிக்க முயற்சிக்கிறார்கள். வெளியில் உள்ள சிலர் பத்திரிகைகள் மூலமும் முன்னாள் வீரர்கள் மூலமும் எங்களுக்குள் பிளவு ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். அவர்கள் முயற்சி பலிக்காது. இது அவுஸ்திரேலிய அணிக்கெதிராக பிரிஸ்பான் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாளான கடந்த 10 ஆம் திகதி ஆட்ட நேர முடிவில் மார்வன் அத்தபத்து ஊடகங்களுக்கு வெளியிட்ட கருத்தாகும். இந்தக் கருத்தே தற்போது மார்வனுக்கு வினையாக முடியும் வாய்ப்பை தோற்றுவித்துள்ளது. இந்த கருத்துக்களின் மூலம் ஹஸந்த டி மெல் தலைமையிலான தேர்வுக் குழுவை முன்னாள் இலங்கை அணித்தலைவர் மார்வன் அத்தபத்து நேரடியாக போருக்கு அழைத்துள்ளார்.

இதன்போது தனது தனிப்பட்ட குரோதத்தை முழு தேர்வுக் குழுவின் மீதும் மார்வன் இவ்வாறு வெளியிட்டுள்ளமையே தற்போது சர்ச்சையை கிளப்பியுள்ளமைக்கு காரணமாகும். மார்வன் தற்போது வெளியிட்டுள்ள கருத்துக்கள் சாதாரணமானவையாக எடுத்துக்கொள்ள முடியாது.

இலங்கை அணியில் விளையாடி வரும் பெரும்பாலான வீரர்கள் அந்த இடத்துக்கு தகுதி அற்றவர்கள் என இதன் மூலம் மார்வன் குறிப்பட்டுள்ளார்.

எனவே எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் இதே தேர்வுக் குழு தேர்வு செய்த அணிதான் உலகக் கிண்ணத்தின் இறுதிப் போட்டி வரை முன்னேறியது. இது மட்டுமல்லாது இங்கிலாந்து மண்ணில் இங்கிலாந்து அணியை வெள்ளையடிப்பு செய்து வரலாறு படைத்ததும் இந்த அணி தான். இந்நிலையில் தன்னை தனிப்பட்ட முறையில் புறக்கணித்தமைக்காக முழு தேர்வுக் குழுவையும் பொம்மைகள் எனவும் தேர்வுக் குழுத் தலைவர் ஹஸந்த டி மெலை கோமாளி எனவும் விமர்சித்துள்ளதை எந்த வகையில் ஏற்க முடியும் என்பது தான் தற்போதைய கேள்வியாகும். இந்தப் பின்னணியில் மார்வனுக்கு எதிராக இலங்கை கிரிக்கெற் இடைக்கால சபையும் தற்போது போர்க்கொடி தூக்கி விட்டது.

இலங்கை அணி அவுஸ்திரேலியாவில் இருந்து நாடு திரும்பயதும் மார்வன் மீதான முடிபு எடுக்கப்படவுள்ளதாக இலங்கை கிரிக்கெற் இடைக்கால சபை அறிவித்துள்ளது. எனினும், இந்த சர்ச்சையை மார்வன் அத்தபத்துவின் கோணத்தில் இருந்து பார்த்தால் தனக்கு தேவையான பந்து வரும் வரை காத்திருந்திருக்கிறார் என்றே கருதவேண்டி இருக்கிறது.

இதற்கு முன்னர் காயத்தில் இருந்து மீண்டும் அணிக்கு திரும்பிய போது தனது அணித் தலைமை பறிபோயிருந்ததற்கு எதிராக மார்வன் அத்தபத்து எதுவும் கதைக்கவில்லை. தனது நிரந்தர இடம் பறிபோயிருந்த நிலையில் அணியில் தள்ளாடிக் கொண்டிருந்த போது கூட மார்வன் மௌனமாகவே இருந்தார். எல்லாவற்றுக்கும் மேலாக எந்த காரணமும் இல்லாமல் உலகக் கிண்ணத்தில் ஒரு போட்டியில் கூட வாய்ப்பு கிடைக்காத போது கூட அவர் ஊடகங்களின் முன் தனக்கு ஏற்பட்ட அநீதி குறித்து வாய்திறக்கவில்லை. இவ்வாறு அத்தபத்து மௌனத்தை கலைக்க எவ்வளவோ சந்தர்ப்பம் இருந்த போது கூட வாய் திறக்காமல் காத்திருந்தது தனக்கு தேவையான பந்துக்கு பௌண்டரியோ, சிக்ஸரோ விளாசுவதற்கு தான்.

இதற்கு முன்னர், விளையாட்டு அமைச்சர் மூலம் தனக்கு அணியில் இடம்கிடைப்பது உறுதியான நிலையில் தேர்வுக் குழு தலைவர் ஹஸந்த டி மெல் பேச்சுவார்த்தைக்கு அழைத்த போது, தனக்கு வேறு வேலை இருப்பதாக குறிப்பட்டது கூட மார்வன் காத்திருந்து அடித்த பந்தாகத்தான் அமைந்தது.

இந்நிலை அவர் தற்போது அடித்துள்ள பந்தும் அவ்வாறு அமைவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளது. மார்வன் அத்த பத்து வெளியிட்ட இந்த கடுமையான விமர்சனத்தை வாபஸ் பெற்றால் அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டோம் என விளையாட்டு துறை அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார் என்று ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. எனவே மார்வன் அத்தபத்து அடித்த பந்து பௌண்டரி எல்லையை தாண்ட வாய்ப்பு அதிகரித்துள்ளமை இதன் மூலம் உறுதியாகியுள்ளது.

இதில் மார்வன் அத்த பத்து தனது விமர்சனத்தை வெளியிட்ட தினமும் முக்கியமானதாகும். ஆஸி. அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாளான அன்றைய தினத்தில் முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய மார்வன் அத்தபத்து மாத்திரம்தான் பொறுப்புடன் ஆடி அணிக்காக அரைச் சதம் ஒன்றைக் கூட பெற்றார்.

இதன் மூலம் அவர் அவுஸ்திரேலிய தொடரில் தான் கட்டாயம் இருக்க வேண்டிய ஒரு வீரர் என அணிக்கு உணர்த்திய தன் பின்னரே தேர்வுக் குழு மீது போர் தொடுத்தார். இதனைத் தொடர்ந்தே அவுஸ்திரேலிய தொடர் முழுவதும் மார்வன் அத்தபத்து கட்டாயம் இருக்க வேண்டிய வீரர் என அணித் தலைவர் மஹேல ஜயவர்தன மற்றும் அணியின் பயிற்சியாளர் டிரவர் பெய்லிஸ் ஆகியோர் கருத்து தெரிவித்தனர். இதன் காரணமாகவே மார்வன் அத்தபத்து மீது இலங்கை கிரிக்கெற் இடைக்கால சபையினால் உடனடி நடவடிக்கை எடுக்க முடியாமல் போனது. இது கூட மார்வன் சரியான நேரத்திலேயே தனது துடுப்பை சுழற்றியுள்ளார் என்பதை உறுதி செய்கிறது.

இந்தநிலையில் தற்போதிது ஹோபார்ட்டில் நடைபெற்று வரும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் மார்வன் அத்தபத்து ஆடுகளத்தில் சரியான பந்துகளுக்கு துடுப்பெடுத்தாடி இலங்கை அணி வரலாறு படைக்க முக்கிய பங்கு வகித்தால் அவர் மீதான சர்ச்சைகள் மறக்கடிக்கப்படக் கூட வாய்ப்புகள் உள்ளன. எது எவ்வாறாயினும் மார்வன் அத்தபத்து சரியான நேரத்தில் சரியான திசையில் துடுப்பை சுழற்றினாரா என்ற கேள்விக்கான பதில் தற்போதைய நிலையில் இலங்கை கிரிக்கெற் இடைக்கால சபையின் கையிலேயே உள்ளது.

# 94 ஓட்டங்களை எட்டியதும் சூப்பர் சிக்ஸர் அடியுங்கள் அப்பா!

## சச்சினுக்கு மகன் அர்ஜுன் ஆலோசனை

சமீப காலமாக சதம் அடிக்கும் வாய்ப்பை சச்சின் நூலிழையில் தவற விடுகிறார். இதற்கு முற்றுப்புள்ளி வைக்க 94 ஓட்டங்களை எட்டியதும் ஒரு சூப்பர் சிக்ஸர் விளாசி சதம் அடிக்கும் படி அவரது மகன் அர்ஜுன் ஆலோசனை வழங்கியுள்ளாராம்.

ஒரு நாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் அதிக சதம் கடந்தவர் என்ற சாதனைக்கு சொந்தக்காரர் சச்சின். இவர் இதுவரை ஒரு நாள் போட்டிகளில் 41 டெஸ்டில் 37 சதம் என மொத்தம் 78 சதங்களை பதிவுசெய்துள்ளார். ஆனால் சமீபகாலமாக இவர் 90களில் அவுட்டாவது வழக்கமாக உள்ளது. இதுவரை டெஸ்டில் 7 ஒரு நாள் போட்டிகளில் 16 முறை என 23 முறை சதங்களை நழுவ விட்டிருக்கிறார். இவர் இந்தாண்டு 6 முறையும் தற்போதைய தொடரில் 2 முறையும் 90களில் பெவிலியன் திரும்பியுள்ளார். இதை இவர் முழுமையாக பூர்த்தி செய்திருந்தால் இந்நேரம் 101 சதங்கள் கடந்திருப்பார். இதேபோன்ற பிரச்சினை சச்சினுக்கு ஆரம்ப காலத்திலும் இருந்தது. ஒரு நாள் போட்டிகளில் முதல் சதம் கடக்க இவருக்கு 79 போட்டிகள் தேவைப்பட்டது. கடைசியாக விளையாடிய 28 போட்டிகளில் இவர் ஒரு சதம் கூட எடுக்கவில்லை.

தொடர்ந்து சதங்களை கோட்டைவிடுவது குறித்து சச்சின் கூறுகையில் 90களில் அவுட்டாகும் தவறான பழக்கம் என்னை தொற்றிக் கொண்டுள்ளது. என் மகன் அர்ஜுன்கூட 94 ஓட்டங்கள் எடுத்தவுடன் ஒரு சிக்ஸர் அடித்து சதம் எட்டலாமே? என அலோசனை கூறினான். கிரிக்கெற்றில் இது நடக்க கூடியது தான். என்னை பொறுத்தவரை இந்திய அணி போட்டியில் வென்று தொடரை கைபற்றியது தான் மிகவும் முக்கியம். இது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை தந்தது என்றார்.

இது குறித்து அணித்தலைவர் தோனி அளித்த பேட்டி, சச்சின் தொடர்ந்து சதங்களை தவறவிடுவது வருத்தம் அளிக்கிறது. ஒரு நாள் போட்டிகளில் 6 சதம் கடக்க முடியாமல் பல வீரர்கள் ஓய்வு பெற்று விடுகின்றனர். ஆனால் சச்சின் இந்தாண்டு மட்டும் 6 முறை சத வாய்ப்பை நழுவ விட்டுள்ளார். இவர் 42வது சதம் எப்போது கடப்பார் என்பது ஆண்டவனுக்கு மட்டும் தான் தெரியும். ஆனால் அவர் அடுத்த போட்டியிலே இதை செய்வார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அவருடன் அணியில் விளையாடுவது மிகவும் மகிழச்சி தருகிறது. அனைத்து பொறுப்பகளையும் அவரே ஏற்றுக்கொள்கிறார். இவ்வாறு தோனி தெரிவித்தார்.

சச்சின் சதம் தவறவிடுவது பற்றிய முன்னாள் இந்திய பயிற்சியாளர் கெய்க்வாட் கூறுகையில், 90களில் இருக்கும் போது. இன்னும் அதிக கவனம் செலுத்தவேண்டும் எந்தவொரு வீரருக்கும் அதிர்ஷ்டம் கண்டிப்பாக இருக்கும். ஆனால் இவர் குவாலியரில் அவுட்டாகிய விதத்தை பார்க்கும் போது கவனக்குறைவாக இருப்பதாக நினைக்கிறேன்என்றார்.

சச்சின் 42ஆவது சதம் கடக்க முடியாமல் திணறுவது குறித்து முன்னாள் தேர்வு குழுத் தலைவர் கிரண் மோரே கூறியது, இது மிகவும் துரதிஷ்டவசமானது. 78 சதம் கடந்த வீரர் இது போன்ற சமயங்களில் நெருக்கடிக்கு பணியக் கூடாது. இவர் தவறானஷாட் அடித்து அவுட்டாகுகிறார் என கூறிவிட முடியாது.

இது துடுப்பாட்ட நுட்பத்தில் ஏற்படும் சாதாரண குறைதான். அவர் முதல் பந்திலிருந்து கடைசி பந்துவரை அதிக கவனத்துடன் விளையாடுகிறார். இவர் தனது இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினாலே சதம் கடந்து விடலாம்.

இவ்வாறு மோரே தெரிவித்தார். இது குறித்து முன்னாள் வீரர் அலி பெய்க் கூறியது, சச்சின் லிட்டில் மாஸ்டர் கவாஸ்கரை பின்பற்ற வேண்டும். கவாஸ்கர் விளையாடும் போது ஸ்கோர்



போர்டை பார்க்கவே மாட்டார். இதுபோல் செயல்பட அனைவராலும் முடியுமா எனத் தெரியவில்லை. சச்சின் இது பற்றி கவலைப்படத் தேவையில்லை இன்னும் கொஞ்சம் கடிணமாக உழைத்தால் போதும் 42வது சதம் கடந்துவிடலாம். இதைசெய்துவிட்டால் இவர் தொடர்ந்து சதங்களை குவிக்கலாம்.

அமிர்தன்

# சினிமா துளிகள்




✦ 'கந்தசாமி' படத்திற்காக ஒரு சேஸிங் காட்சியையும், ஒரு சண்டைக் காட்சியையும் கென்யாவில் படமாக் கவுள்ளனர்.

✦ 'வாரணம் ஆயிரம்' படத்தில் நடிக்கும் இந்தி நடிகை சமீரா ரெட்டியின் சம்பளம் இருபத்தி ஐந்து லட்சமாம்.

✦ ஆந்திரப் பத்திரிகைகளில், த்ரிஷாவையும் 'மகேஷ் பாபுவையும் இணைத்து கிசுகிசுக்கள் நிறைய வருகின்றன.

✦ 'மருதமலை' வெற்றியைத் தொடர்ந்து, அர்ஜுன் தயாரித்து நடிக்கும் படத்தை.சுராஜ் இயக்குகிறார்.

✦ இரண்டு இந்திரப் படங்களில் நடித்திருக்கும் ஸ்ரேயா இப்பொது இணைந்து ஒரு படத்தில் நடித்து வருகிறார்.

✦ ஷங்கர் தயாரிப்பில்,ஹோசிமின் இயக்கும் படத்தில் நடிக்கவிருக்கிறார் மனிஷா கொய்ராலா.

✦ 'ஹேப்பி டேஸ்' உட்பட பல்வேறு லோ பட்ஜெட் படங்களை விநியோகம் செய்து வருகிறது பிரகாஷ்ராஜின் டூயட் மூவிஸ்.

✦ 'பருத்திவீரன்' படத்தின் 300ஆவது நாளை தேனியில் கொண்டாடவிருக்கிறார்கள்.

✦ ஜான் ஆப்ரஹாமுடன் ஏற்பட்ட மோதலுக்குப் பிறகு, மும்பை தொழிலதிபருடன் நெருக்கமாகியி ருக்கிறாராம் பிபாஷா பாசு.

✦ தனக்கு பிரச்சினைகள் ஏற்படும் போதெல்லாம் திருப்பதி சென்று திரும்பும் கனல் கண்ணன் சமீபத்தில் திருப்பதி சென்று திரும்பியிருக்கிறார்.

✦ மணிரத்னம் படம் என்றால் மட்டுமே தமிழில் நடிப்பேன் என்று சொல்லி வருகிறார் தெலுங்கில் பிஸியாக இருக்கும் சித்தார்த்.

✦ வாரத்திற்கு ஒருபடம் ரிலீசாகிக் கொண்டிருக்கும் இந் தக் காலத்திலும் ரிலீஸ், எட்டு பீஸ் போஸ்டர் என்று பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது எம்.ஜி.ஆரின் 'அடிமைப் பெண்'.




✦ விஜய் -த்ரிஷா நடிக்கும் 'குருவி' படத்துக்காக பிரம்மாண்ட பங்களா அரங்கை நிர்மாணித்திருக்கிறார் கலை இயக்கு நர் மணிராஜ். இந்த அரங்கை நிர்மா ணிக்க லாரி லாரியாக பிளைவுட் சவுக்கு மரங்கள் பயன்படுத்தப்பட் டுள்ளன.

✦ சமீபத்தில் பிறந்த நாளைக் கொண்டாடிய அசினுக்கு நேரில் வந்து வாழ்த்து தெரிவித்திருக் கிறார் விஜய்யின் அம்மா ஷோபா சந்திரசேகர். அன்றைய தினம் விஜய்யின் பாட்டி வீட்டில் அசினுக்கு பிரியாணி விருந்து கொடுத்தார்களாம்.

✦ 'எட்டப்பன் படத்துக்கு ஒரே கட்டமாக ஐம்பது நாட்கள் கால்ஷீட் கொடுத்திருக்கிறார் ஸ்ரீகாந்த்.

✦ 'தெரு நாயை யார் வேண்டுமானாலும் சுடலாம்' என்கிறார் கனல் கண்ணன் நாய்களிடமிருந்து காப்பாற்றிக்கொள்ள, தற்காப்புக்காக தன் தெருவாசிகளுக்கு 'டம்மி' துப்பாக்கி வாங்கிக் கொத்திருக்கிறார் இவர்.

✦ சிம்பு நகைச்சுவை வேடத்தில் 'விச்சு' என்கிற பாத்திரத்தில் நடிக்கும் 'சிலம்பாட்டம்' படத்திற்காக ஈக்காட்டுத்தாங்கலில் புதிய அலுவலகம் திறந்து, பூஜை போட்டுள்ளது லட்சுமி மூவி மேக்கர்ஸ் நிறுவனம். ஒளிப்பதிவாளர் சரவணன் இய்க் கும் அந்தப் படத்தில் சிம்புவுக்கு இரு வேடங்கள் இல்லையாம்!



✦ இதுவரை 'லிட்டல் சூப்பர் ஸ்டார்' சிம்பு என்று டைட்டிலில் பெயர் வைத்த சிம்பு, 'காளை' படத்திலிருந்து 'லிட்டில் சூப்பர் ஸ்டார் சிலம் பரசன்' என வைத்துள்ளார். இனி அவரை சிலம் பரசன் என அழைக்கவே விரும்புகிறார்.



சிம்பு இனிமேல் சிலம்பரசன்!

✦ அஜீத் நடித்துள்ள 'பில்லா' படத்தில் நடித்த அனைத்துக் கலைஞர்களும் டப்பிங் பேசி விட்டனர். ஆனால் அஜீத் மட்டும் இன்னும் பேசவில்லை.

✦ 'வெயில்' பட நாயகி பிரியங்கா அடுத்து 'ஆடும் கூத்து' பட இயக்குநர் டி.வி. சந்திரன் இயக்கும், பெண்களை மையப் படுத்தி உருவாகும் மலையாளப் படத்தில் நடித்து வருகிறார். இதில் ஹீரோ கிடையாது. விருதைக் குறிவைத்து எடுக்கும் படம் என்பதால் மேக்கப் இல்லாமல் நடித்து வருகிறார் பிரியங்கா.

✦ 'அன்பு' பாலா ஷாஜிகைலாஷ் இயக்கும் 'பூட்' மலையாளப் படத்தில் மூன்று வேடத்தில் நடிக்கிறார். அதில் ஒன்று சைக்கோ. புதியவர் மோகன்தாஸ் இயக்கும் 'ஓம்காரம்' படத்தில் ஊமை, செவிடு என இரண்டு வேடத்தில் நடிக்கிறார். இதுதவிர 'எஸ்.எம்.எஸ்' 'பத்தாம் அத்தியாயம்', 'அரிந்ரன் ஒரு நிஷ்களங்கன்', 'சஸ்பென்ஸ்' என கைவசம் அரை டஜன் படங்களில் நடித்துவருகிறார். பிரமோதப்பன் இயக்கும் ஒரு பெயரிடாத படத்திற்காக துபாய் போக உள்ளார். அது முழுக்க முழுக்க துபாயில் நடக்கும் கதை.

✦ மாதவன் நடித்த 'ஆர்யா' படத்தை இயக்கிய பால சேகரன் தெலுங்கில் வெளியான 'ஆர்யா' என்ற வேறொரு படத்தை தமிழில் இயக்குகிறார்.



# சினி விமர்சனம்

## அழகிய தமிழ் மகன்



முதன் முறையாக இரட்டை வேடத்தில் விஜய் நடித்து வெளியாகியுள்ள வித்தியாசமான படம் அழகிய தமிழ்மகன். படம் துவங்கியதில் இருந்து முடியும் வரை விசில் சத்தம் பறக்கிறது. அத்தனைக்கும் சொந்தக்காரர் விஜய்தான். காமெடியிலும்,அதிரடியிலும் கலக்கியிருக் கிறார். படத்தில் ஹீரோவும் விஜய்தான்.வில்லனும் விஜய்தான். விஜய் ரசிகர்களுக்கு நல்ல தீனி.

வணிக முகாமைத்துவம் படிக்கும் குருவாக நடித்திருக்கிறார் ஒரு விஜய். இவர் ஒரு தடகள வீரர். இவருக்கும் தொழிலதிபர் ஆசிஷ் வித்யார்த்தியின் மகள் அபிநயா (ஸ்ரேயா)வுக்கும் காதல். காதலுக்கு 2 வீட்டாரும் பச்சைக் கொடி காட்டுகிறார்கள். அட... இது வேற மாதிரி படம்யா...! என்று சொல்லி முடிப்பதற்குள் வில்லனாக வருகிறது விஜய்க்குள் ஏற்படும் புதிய மாற்றம். எதிர்காலத்தில் நடக்கப் போவதை முன்கூட்டியே தெரிந்துகொள்ளும் சக்தி அவருக்கு கிடைக்கிறது.இ.எஸ்.பி.என்ற அந்த சக்தி வந்தால் குரு மும்பை செல்கிறார்.

அப்போது மும்பையில் இருந்து சென்னைக்கு வருகிறார் இன்னொரு விஜய். பிரசாத் என்ற பெயரில் வரும் அவரை எல்லோரும் குரு என்று நினைத்து விடுகிறார்கள். பிரசாத்தை பார்க்கும் ஸ்ரேயா,அவரை தனது வீட்டுக்கு அழைத்து வருகிறார். இந்தக் காட்சிகள் பழைய எம்.ஜி.ஆர். படத்தை நினைவுபடுத்துகிறது.

பணத்துக்காக எதையும் செய்யும் பிரசாத்,பணத்துக்காக ஸ்ரேயாவைத் திருமணம் செய்யமுடிவு செய்கிறார். இதையடுத்து இருவருக்கும் நிச்சயதார்த்தம் நடந்த விடுகிறது. அந்த சூழ்நிலையில் குரு சென்னைக்கு வருகிறார். அதன் பிறகு என்ன நடக்கிறது என்பதுதான் கிளைமாக்ஸ்.அறிமுக இயக்குநர் பரதன் முதல் படத்திலேயே முத்திரை பதித்துள்ளார். விஜய்யின் திறமை,பலம், செல்வாக்கு ஆகிய வற்றை அறிந்து அதற்கேற்ப கதையைக் கொண்டு சென்றுள்ளார். வில்லன் வேடத்தில் வித்தியாசம் காட்டும் விஜய் நடிப்பில் அடுத்த மைல்கல்லுக்கு சென்று விட்டதை உணர்த்துகிறது.

சினிமா நடிகையாக வரும் ஷகீலாவின் வீட்டில் சந்தானம்,சத்யன் அடிக்கும் லூட்டி செம ஜாலி. பாடல்களை தவிர்த்து மற்ற இடங்களில் ஸ்ரேயாவா இது? என்று கேட்கும் அளவுக்கு ஹோம்லியாக நடித்திருக்கிறார் ஸ்ரேயா. ஒரு பாடலில் ஆடினாலும் நமீதாவின் கவர்ச்சி ரசிகர்களுக்கு நெகிழ்ச்சி.

## வேல்



இரட்டைக் குழந்தைகள் பிறக்கும் ஒரு குடும்பத்திலிருந்து கதையை துவக்கியிருக்கிறார் டைரக்டர் ஹரி. சந்தர்ப்ப சூழ்நிலைகளில் இரு குழந்தைகளும் பிரிந்து விடுகின்றன. ஒரு குழந்தை (வாசு) சென்னையில் தனியார் துப்பறியும் நிறுவன அதிகாரியின் மகனாக வளர்கிறான். இன்னொருவன் (வேல்) திண்டுக் கல்லில் பக்கா கிராமத்து இளைஞனாக முரட்டுத்தனமாக வளர்கிறான். ஒரு கட்டத்தில் சந்தித்துக்கொள்ளும் சகோதரர்கள் பொதுவான வில்லனை ஒழித்துக் கட்டுவது தான் படத்தின் கதை.

வேலாக வரும் சூர்யா கோபம் கொப்பளிக்கும் கிராமத்து நாயகன். வாசுவாக வரும் சூர்யா பரம சாதுபோல தெரிகிறார். இரு கேரக்டர்களுக்கும் நல்ல வித்தியாசம் காட்டி நடித்துள்ளார் சூர்யா. உருவத்திலும், நடிப்பிலும் வித்தியாசம் தெரிகிறது.



பிரமாண்ட வெற்றிப்படம் கஜினிக்கு பிறகு சூர்யா -அசின் ஜோடி மீண்டும் ஜோடி சேர்ந்துள்ளது. அழகான அசின் மெழுகு பொம்மையாக தோன்றி, டிவி. தொகுப்பாளினி செவன்அப் ஸ்வாதியாக வருகிறார். சோடாபுட்டி கண்ணாடி அணிந்து கொஞ்சிப் பேசுவது ரசிக்க வைக்கிறது. வாசுவாக வரும் சூர்யாவுக்கும்,ஸ்வாதிக்கும் காதல் மலர்கிறது. இன்னொரு புறம் வேலும் வாசுவும் சந்திக்கிறார்கள். அப்போது முன்னாள் அமைச்சரும், உள்ளூர் தாதாவுமான சங்கரபாண்டி (கலாபவன் மணி) வேலின் வாழ்க்கையில் வில்லனாக வருகிறார். இரண்டு சூர்யாவுக்கும் பொது எதிரியான கலாபவன் மணியை அடித்து துவம்சம் செய்கிறார்கள். யுவன் ஷங்கர் ராஜாவின் இசையில் பாடல்கள் ரசிக்க வைக்கிறது. டைரக்டர் ஹரி தனது படத்தை வழக்கம்போல விறுவிறுப்பாக நகர்த்தியிருக்கிறார்.

# சினேகாவின் கால்ஷீட் டைரி



துடைத்து வைத்த குத்துவிளக்கு போல் இருக்கிறார் சினேகா. சென்னைக்கும் ஐதராபாத்துக்கும் திருவனந்தபுரத் திற்கும் மாறி மாறி விமானத்தில் பறந்து வரும் சினேகாவை தி.நகரில் உள்ள அவரது வீட்டில் மடக்கி பிடிப்பதற்குள் நமக்கு போதும் போதுமென்றாகிவிட்டது.ஒரு வாக்கியம் பேசி முடிப்பதற்குள் தமிழ், தெலுங்கு, மலையாளம் என மூன்று மொழிகளும் இடைச் செருகலாய் வந்து போகிறது. எல்லாம் ஷூட்டிங் செய்கின்ற மாயம் என்று தனக்கே உரித்தான டிரேட் மார்க் சிரிப்போடு கூறுகிறார் சினேகா.

இந்த தீபாவளி உங்களுக்கு எப்படி என்று சினேகாவிடம் கேட்ட போது விளம்பரத்தில் வருவதுபோல 'நான் ரொம்ப பிஸி' என்று பயணக் களைப்பு தவழ்கிற முகத்தோடு பதில் கூறுகிறார்.

இனி சினோக கூற,நாம் கேட்டவை வாசுகளாகிய உங் களுக்காக... தமிழில் ஷாமுடன் 'இன்பா' படத்தில்நடிக்கிறேன். இதில் முழுக்க முழுக்க அல்ட்ரா மாடர்ன் பெண் ணாக வருகிறேன். ஏற்கனவே ஷாமு டன் நான் நடித்திருந்தாலும் இந்தப் படத்தில் முற்றிலும் புதிய ஒரு பரிமா ணத்துடன் எங்கள் ஜோடி காட்சிய ளிக்கும்.அதைத் தொடர்ந்து லாரன்ஸ் உடன் 'பாண்டி' படத்தில் நடிக்கி றேன். 'ஆட்டோகிராப்' படத்திற்கு பிறகு சேரனுடன் இணைந்து கூடிபிரிவோம் சந்திப்போம்' படத்தில் நடிக்கிறேன். காரைக்குடி பகுதியில் வசிக்கும் செட்டி நாட்டு பெண்ணாக் இதில் நடிக்கி றேன். மம்முட்டி, அர்ஜுனுடன் இணைந்து நடிக்கும் அறுவடை படத்தில் விமான பணிப்பெண்ணாக நடிக்கிறேன்.

இதையெல்லாம் தமிழ் பேட்டாக்கள். கொஞ்சம் தெலுங்கு பக்கம் சொல்றதா இருந்தா,பிரபல தயாரிப்பாளர் தாசா நாராயணராவ் மகன் அருண் கதாநாயகனாக நடிக்கும் 'ஆதி விஷ்ணு' படத்தில் தற்போது நடித்துக் கொண்டிருக்கிறேன்.

அடுத்ததாக பாலகிருஷ்ணாவுடன் இணைந்து 'பாண்டு ரங்கன்' என்ற படத்தில் நடிக்க உள்ளேன். அடுத்து இயக்குநர் ராஜா இயக்கத்தில் பெயரிடப்படாத படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளேன்.ஒவ்வொரு தீபாவளியின் போதும் சென்னை யில் என் குடும்பத்தாருடன் இணைந்து அதனை கொண் டாடுவேன். ஆனால் இந்த முறை அன்றைய தினம் எந்த ஊரில் எந்த படத்தின் ஷூட்டிங்கில் இருப்பேன் என்று எனக்கே தெரியவில்லை.

ஒருவேளை தீபாவளி அன்று நான் சென்னையில் இருந்தால் காலை எழுந்து குளித்து விட்டு பெற்றோருடன் கோயி லுக்கு செல்வேன். நண்பர்களுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு தீபாவளி வாழ்த்துக்களை பரிமாறிக் கொள்வேன்.

சீடை,முறுக்குகளை கையில் வைத்துக்கொண்டு டிவியில் சாலமன் பாப்பையா பட்டிமன்றத்தை பார்ப்பேன். இந்த தீபா வளி இதுபோன்று அமைய நீங்களும் எனக்காக கொஞ்சம் பிரார்த்தனை செய்யுங்களேன் என சினேகா சிணுங்கலோடு கேட்க, ஆகட்டும் ஆகட்டும் என்று தலையை இருபுறமும் ஆட்டியபடி பை பை சொன்னோம்.

## சினிமா செய்திகள்




ஐ.டி.ஏ.பிலிம்ஸ் எஸ்.என் ராஜா தயாரிக்கும்படம் ராமேஸ்வரம் சிவானந்தராஜா என்கிற ஜீவன் என்ற கேரக்டரில் ஜீவா நடிக்கிறார். பணக்கார வீட்டில் பிறந்த எளிமையான பெண்ணாக பாவனா நடிக்கிறார். பழமொழி சொல்லும் பாட்டியாக இல்லாமல், படித்த பாட்டியாக 'வெண்ணிற ஆடை' நிர்மலா நடிக்கிறார்.

பாவனாவின் தாய் மாமனாக 'போஸ்' வெங்கட் வில்லனா நல்லவனா எனுமளவுக்கு இவருடைய கேரக்டர் மிகவும் வித்தியாசமாக சித்தரிக்கப்பட் டுள்ளது. இந்தப் படத்துக்காக மற்ற படங்களை ஒப்புக்கொள்ளாமல் நான்கு மாதம் தாடி வளர்த்து நடித்திருக்கிறார் 'குப்பி' சங்கர்.கல்லூரிப் பேராசிரியராக நடிக்கும் மணிவண்ணன் குடும்ப உறவுகளை போரில் பறிகொடுத்து விட்ட நிலையில். எஞ்சியிருக்கும் பேரன் ஜீவாவுக்காக ராமேஸ்வரத்துக்கு அகதியாக வருகிறார். இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களும் ராமேஸ்வரத்தில் இருக்கிற பாவனாவின் காதலும் தான் படத்தின் கதை.மனது முழுக்க தீயை அடைகாக்கும் ஒரு கேரக்டரில் ஜீவா நடிக்கிறார். கண்ணில் சோகம்,கோபம் என நடிப்பில் வித்தியாசம் காட்டி நடித்திருக்கும் ஜீவாவின் நடிப்பு இலங்கைத் தமிழர்களின் கேரக்டரை அச்சு அசலாக பிரதிபலிக்கும் வகையில் உருவாக்கப்பட் டுள்ளது. நிரு இசையமைத்திருக்கும் இந்தப் படத்தின் ஆடியோ, வெளியிட்ட ஒரே வாரத்தில் விற்றுத் தீர்ந்துவிடவே அடுத்த பதிப்பு போடப் பட்டுள்ளது. 'உற்சாகம்' குருதேவின் கமரா நம்மை ராமேஸ்வரத்தில் இறக்கிவிட்ட மாதிரி 'லைவ்' வாக படம் பிடித்திருக்கிறது. வெறும் சண்டையாக மட்டுமே இல்லாமல் சண்டையிலும் கதை இருக்கும் படியாக ரசனையாக சண்டைக்காட்சிகளை ஆக்ஷன் பிரகாஷ் அமைத்திருக்கிறார். தன்னைத்தானே பெண் என்று நம்ப விரும்பாத பெண்ணாக நடன இயக்குநர் சாந்தி நடித்திருக்கிறார். 'கப்பல் வருமா...' பாடலுக்கும் நடனம் இவர்தான். ஜீவா திருமணப் பரிசாக 30ஆம் திகதி இந்தப் படம் திரைக்கு வருகிறது. இலங்கையை விட்டுவந்த தமிழர்களுக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதும் சொந்த மண்ணை விட்டு வந்த எல்லா மக்களுக்கும் இந்தப் படத்தை சமர்ப்பணம் செய்திருக்கிறார்கள்.

# பங்குச்சந்தை போல பாராளுமன்றத்திலும் இலத்திரனியல் விபரப்பட்டியல் பொருத்தவேண்டும்

## சபாநாயகருக்கு வீரவன்ச எம்.பி. ஆலோசனை

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் இன்றைய நிலைமையினை கருத்தில் கொண்டு சபையின் நுழைவாயில்களில் டிஜிட் டல் திரை (இலத்திரனியல் விபரப் பலகையை) பொருத்த வேண் டும் என்று ஜே.வி.பியின் பாராளு மன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச சபா நாயகருக்கு ஆலோசனை வழங் கினார்.

பாராளுமன்றம் நேற்றுமுன் தினம் காலை 9.30 மணிக்கு சபா நாயகர் வி.ஜே.மு.லொக்குபண் டார தலைமையில் கூடியபோது நாளாந் தம் நடவடிக்கை முடிவடைந்து வாய் மூல கேள்விக்கான நேரத்தில் எம். பிக்களினால் கேட்கப்பட்டிருந்த கேள் விகளுக்கு அரசாங்கத்தின் பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜெய ராஜ்பெர்னாண்டோ புள்ளே பதிலளித் துக்கொண்டிருந்தார். அப்பொழுது ஐ.தே.கவின் வரிசை எம்.பிக்கள் அரச தரப்பைப்பார்த்து அதோ வரு கின்றார். இதோ வருகின்றார் என்று கூறினார். இதனையடுத்து அமைச் சர் ஜெயராஜ்பெர்னாண்டோ புள்ளே ஐ.தே.கவினரை பார்த்து மலர் மாலை யுடன் தயாராக இருங்கள். இந்தப் பக்கத்திற்கு அனுப்பிவையுங்கள் என்று தெரிவித்தார்.

இதற்கிடையே எழுந்த விமல் வீரவன்ச எம்.பி பங்குச்சந்தையைப் போல பாராளுமன்றத்திலும் அதா வது சபை நுழைவாயில்களில் டிஜிட்டல் திரையைப்பொருத்தி ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு உறுப்பினர்க ளின் எண்ணிக்கை விபரங்களை இன்றைய நிலைவரத்தை அறியத் தரவேண்டும்.

ஏனென்றால் இந்தப்பக்கத் திலி ருந்து அந்தப்பக்கத்திற்கும் அங்கி ருந்து இந்தப்பக்கத்திற்கும் மாறப் போகின்றவர்கள் என்று பேசப்படு வதனால் அரச, எதிர்க்கட்சி உறுப்பி னர்களின் எண்ணிக்கையில் இன் றைய நிலைவரத்தை அறியமுடியா துள்ளது. டிஜிட்டல் திரை இருந்தால் சபைக்குள் வருகின்றபோதே உறுப் பினர்களின் எண்ணிக்கையை இல குவாக அறிந்துகொள்ள முடியும் என்றார்.

இதற்கிடையே எழுந்த அமைச் சர் ஜெயராஜ் ஜே.வி.பி தங்களது தேவையை. முன்னிலைப் படுத்து வதற்காகவே இவ்வாறான ஆலோ சனையை முன்வைக்கின்றது என்று சுட்டிக்காட்டினார்.

(அ-5)

# செயற்பாட்டு செயலமர்வுகள்

(அல்வாய்)

துறைசார் கல்வி அபிவிருத்திக்குரிய "சட்டக அமைப்பும் நிகழ்ச்சித் திட்டமும்" சம்பந்தமான செயற்பாட்டு செயலமர்வுகள் வடமராட்சி கல்வி வலயத்தில் புலோலி மெ.மி.த.க பாடசாலையில் எதிர்வரும் 19,20, 21, ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுகள் 19 ஆம் திகதி தரம் I AB பாடசாலைகளுக்கும், 20 ஆம் திகதி தரம் II (O/L) வரையான பாடசாலை களுக்கும் 21 ஆம்திகதி 5 ஆம் தரத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கும் நடைபெறும்.

இதில் குறித்த பாடசாலை அதிபர்களும் ஒரு ஆசிரியரும் பங்குபற்ற வேண்டும் என்றும் இதன் போது 2007, 2008 ஆண்டுகளுக்கான ஆசிரி யர் தரங்கணிப்பு,அதிபர் தரங் கணிப்புப் படிவங்கள் வழங்கப்படும் என்றும் வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார்.

(அ19)

# பசுமைப் புரட்சிக்கு வித்திடு

**11.11.2007வலம்புரி ஆசிரியர் தலையங்கத்தை ஒட்டிய கவிதை**

உணவுக் கப்பல் எத்தனையோ
தினமும் வந்து சேர்ந்தாலும்
நிலையாய் விலைகள் இருக்காது
மலைபோல் உயரும் காலமிது
இயற்கையோ செயற்கையோ
பெட்டிக்கடை முதல் பெரிய கடைவரை
தட்டுப்பாடும் தலை எடுக்கும் –ஆதலால்
வீடும் வெளியும் பசுமைப் புரட்சிக்கு வித்திடு
வீட்டுத்தோட்டம்போட்டு விடு !
நிலத்தைக் கொத்திப் பயிரிடு!
இருக்கும் நிலங்கள் எங்கணுமே
குரக்கன் சாமை தினை உடன்
பயறு கவுப்பீ பயிரிடு!
புத்தம் புதிய காய்கறிகள்
பசிய கீரை மூலிகைகள்
மெத்த வளர்ப்பாய் நீ உண்பாய்
நோய்கள் வாரா நிச்சயமாய்
உயிரைக் கொல்லும் கான்சருக்கு
கிருமிநாசினி காரணமாம்
புரிந்து கொண்டு செயல்படுவாய்
மனித குலத்தை நேசிப்பாய்
பஞ்சம் இங்கு தலைவிரிக்க
பார்த்திருத்தல் அழகாமோ
தஞ்சம் நமக்கு உப உணவு
தக்க படியே செய்திடுவோம்

**கா.கார்த்திகேசு**



கலட்டி எச்சாட்டி மஹாமாரி அம்மன் மணி மண்டபத்துக்கான அத்திபாரக் கல்லை முன்னாள் மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா இட்டு, திருப் பணியை ஆரம்பித்து வைக்கின்றார்.

# அறிவித்தல்

(குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 16ம் பிரிவின் படியானது)

## மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல.நானாவிதம்/100/07 எதிர்

1. **திருமதி வசுந்தரா சடாட்சரன் கதிர்காமர்,**
   லக்சுமி வாசா, நவாலி தெற்கு, மானிப்பாய்.
2. **சிவசிதம்பரப்பிள்ளை சிவசண்முகப்பிள்ளை,**
   வத்தானை வளவு, உடுவில் கிழக்கு, சுன்னாம்.
3. **திருமதி கிறேஸ் ரட்ணதேவி ஜெயரட்ணம்,**
   சின்னப்பா லேன், நவாலி தெற்கு, மானிப்பாய்.
4. **வண.ஈனோக் பூரணமகிபன் புனிதராஜா,**
   கிறிஸ்தவ இறையியல் கல்லூரி, மருதனார்மடம், சுன்னாகம்.

**வழக்காளிகள்**

1. **அதி.வண.டானியல் செல்வரத்தினம் தியாகராஜா.**
   பேராயர் இல்லம், வட்டுக்கோட்டை. அத்துடன் 36-5/2 சின்சபா றோட்டு, கொழும்பு-6
2. **ஆசீர்வாதம் அருள் யோசப். ஆதீனக் காரியாலயம்,**
   தென்னிந்தியச் திருச்சபை யாழ். ஆதீனம், வட்டுக்கோட்டை.
3. **திருமதி ஷிரானி மில்ஸ்.**
   அதிபர்,மிஷன் இல்லம், உடுவில் மகளிர் கல்லூரி, உடுவில்.
4. **திரு. C.D சின்னக்கோன்**
   3,Eபுளொக், பம்பலப்பிட்டி பிளாட்ஸ், கொழும்பு-04
5. **வண.செல்வி டெய்சி ஆசீர்வாதம்**
   இல.17, பிரான்சிஸ் றோட், கொழும்பு-6
6. **வண. G. நடராஜா**
   ஆசிரியர் தங்குமிடம், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.
7. **கலாநிதி செல்வி C.V. செல்லையா.**
   44/1E.S.பெர்னாண்டோ-மாவத்தை, கொழும்பு-6
8. **Dr. V.R.டேவிட் .**
   மே/பா, திருபாலகிருஷ்ணன், லோட்டன் றோட், மானிப்பாய்.
9. **Dr. திருமதி தயா தியாகராஜா**
   பேராயர் இல்லம், வட்டுக்கோட்டை, அத்துடன் 36-5/2 சின்சபா றோட்டு, கொழும்பு-6.
10. **வண. S.P.நேசகுமார்.**
   பிராந்தியக் குருமுதல்வர்,பிராந்தியக் குருமுதல்வர் இல்லம், அங்கிலிக்கன் திருச்சபை, பிரதான வீதி ,சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
11. **வண.செல்வி· M.F.J. இரத்தினசிங்கம்.**
   மெதடிஸ்த திருச்சபை, புத்தூர்.
12. **திருமதி E.A.ஜெயராஜன்.**
   ஆசிரியர் தங்குமிடம்,யாழ்ப்பாணக் கல்லூரி,வட்டுக்கோட்டை .

**எதிராளிகள்**

மேற்படி வழக்காளிகள் இவ்வழக்கின் மேலே கூறப்பட்டுள்ள எதிராளிகளுக்கெதிராக உடுவில் மகளிர் கல்லூரிக்குப் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள கல்லூரிச்சபை தொடர்பாக இம்மன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளார்கள். இம்மன்று இவ்வழக்கில், மேற்படி எதிராளிகளுக்கெதிராக கட்டாணையையும் பிறப்பித்துள்ளது. ஆதலால் இதில் அக்கறையுள்ள வேறு எவராவது இருப்பின் அவர்கள் இவ்வழக்கில் இடையுகுனராக நேரடியாகவோ அல்லது ஒரு சட்டத்தரணி மூலமாகவோ இணைந்து கொள்ளலாம் என்று இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது.

மேலும் இவ்வழக்கு 2008-01-10 ஆம் திகதி இம்மன்றிற் காலை 9.00மணிக்குக் கூப்பிடப்படும் என்பதையும் இத்தால் அறியத்தருகிறேன்.

*மாவட்ட நீதவான் நீதிமன்றம், மல்லாகம்.*
*18.11.2007*

*நீதிமன்றக் கட்டளைப்படி*
*பதிவாளர்.*

(606)

# அகில இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் யாழ் மாவட்ட பாடசாலை மட்ட போட்டிகள்

அகில இலங்கை உதைபந் தாட்ட சம்மேளனம், அதன் youth federation progamme ன் கீழ் அகில இலங்கை ரீதியில்,பாட சாலை அணிகளுக்கு இடையில் நடாத்தி வரும் 2007 ஆண்டிற்கான உதை பந்தாட்டம் போட்டித் தொடரின் ஓர் அங்கமாக யாழ். பாடசாலை அணி களுக்கிடையில் கடந்த இரு மாதங் களாக நடாத்தப்பட்டு வந்த 13வது பிரிவின் இறுதி ஆட்டங் கள் 15 ஆம் திகதி பி.ப 3மணி தொடக் கம் யாழ். மத்திய கல்லூரியின் ஆடு களத்தில் நடைபெற்றன. அதில் முதலில் இடம் பெற்ற மூன்றாம் இடத்திற் கான ஆட்டத்தில் நாவாந்துறை றோ.க.பா அணி அதனை எதிர்த்துஆடிய சென் ஜேம்ஸ் பாடசாலை அணியை சம நிலை யை உடைப்பதற்காக கொடுக் கப்பட்ட மேலதிக உதைகளின் போது ஒரு கோலை ப் போட்டு வெற்றியீட்டி 3 ஆம் இடத்தை தனதாக்கிக் கொண் டது.

இவ்வாட்டத்திற்கு நடு வர்களாக C சுரேஸ் TC அன்று தமிழ் இனியன் ஆகியோர் கடமையாற்றினார்கள். அத னைத் தொடர்ந்து இடம் பெற்ற முதலாம் இடத்திற்கான ஆட் டத்தில்யாழ் மத்திய கல்லூரி அணி சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியை பலத்த போட்டி யின் பின் 1: 0 என்ற கோல் கணக் கில் வென்று இவ்வருட சம்பி யன் ஆனது. இவ்வாட்டத்திற்கு நடு வர்களாக A. சுரேந்திரன். Sகனியூட். TC அன்றூ ஆகி யோர் கடமையாற்றினார்கள்

அ. இ. உ. சம்மேளனத் தின் யாழ். பிரதிநிதி திரு. M.பேட்டி பனிஸ்ரரின் நெறிப்படுத் தப் பட்ட இந் நிகழ் வில் முதன்மை விருந்தினராக உடற்கல்வி உத விக் கல்விப்பணிப்பாளர் K.குமா ரசாமியும் சிறப்பு விருந்தினராக யாழ். உ.ம. சங்கத் தின் தலைவர் நடுநிலைச் செம்மல் கப்ரின் D.A.M.குணசிங்கம் ஜே.பி யும் கலந்துகொண்டனர். (அ-110)

# இராசிபலன்

18.11.2007
(கார்த்திகை 02, ஞாயிற்றுக்கிழமை)
அட்டமி முற்பகல் 10.47 மணிவரை
அவிட்டம் முற்பகல் 9.49 மணிவரை
இராகுகாலம் - 4.38 - 6.08மணிவரை
சுபநேரம் -9.08-10.38மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தொழில்லாபம், எடுத்த காரியம் கை கூடும், நல்லவரவேற்பு, போசன சுகம். |
| இடபம் | பிரபுத்தனம், இஷ்டசித்தி, நன்கொடை, மனமகிழ்ச்சி. |
| மிதுனம் | உத்தியோகபங்கம், பிரயாணம், குடும்பக்கவலை, கட்டுப்பாடு. |
| கடகம் | பொருள்விரயம் , அஜீரணக்கோளாறு, வாகனப்பயம், காரிய தடங்கல். |
| சிங்கம் | தெய்வசிந்தை, அபூர்வசந்திப்பு, குடும்ப மகிழ்ச்சி, போசன நன்மை. |
| கன்னி | விரும்பியபொருள் கிடைக்கும் வாய்ப்பு, நோய் குணமடையும், நண்பர்கள் உதவி. |
| துலாம் | பணக்குறைவு , அஜீரணரோகம்,காரிய இடையூறு, தாழ்ந்த சுபாவம். |
| விருச்சிகம் | தன்னம்பிக்கைக்குறைவு , ரோகநிலை, முயற்சி தாமதம், போசன சுகம். |
| தனுசு | மனோதைரியம், சுவாரஷ்யம், காரிய அனுகூலம் , போசன நன்மை. |
| மகரம் | எடுத்த காரியம் தாமதமாகும், பொருள் விரயம், திடீர் நன்மை, விவாதம். |
| கும்பம் | தெய்வசிந்தை, போசனசுகம், புதிய முயற்சி, நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | காரியஅலைச்சல், சோம்பல்நிலை, புத்திரரால் கவலை, சுபசெலவு. |

**வளவன்**

வெங்காயம் கிடைத்ததற்கே துள்ளிக் குதிப்பவன், வெல்லம் கிடைத்தால் என்ன செய்வானோ?

– அரேபியா

வலம்புரி

## புலிகளைத் தடைசெய்வதன் மூலம் ஜே.வி.பியை திருப்திப்படுத்த முடியுமா?

விடுதலைப் புலிகளை இலங்கையில் தடை செய்வதன் மூலமாக, ஜே.வி.பியை திருப்திப்படுத்துவதில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

விடுதலைப் புலிகளை தடைசெய்ய வேண்டும் என்பது ஜே.வி.பியின் கோரிக்கை. இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுதனூடாக வரவு செலவுத்திட்டத்திற்கு ஜே.வி.பியின் ஆதரவைப்பெற அரசாங்கம் எண்ணியிருப்பதானது அரசின் சுய நலத்தை வெளிக்காட்டுவதாக உள்ளது.

எனினும் விடுதலைப் புலிகளை தடைசெய்வதால் மட்டும் ஜே.வி.பியை திருப்திப்படுத்த முடியுமா என்றால் அதுதான் இல்லை.

ஏனெனில் அந்தக் கட்சியின் போக்கை நோக்கினால் வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபையை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது. இதனால் வடக்கு-கிழக்கு இணைப்பு உடைக்கப்பட்டு தனித்தனி மாகாணங்களாக்கப்பட்டன. இதனால் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியானது மேலுமொருபடி பின்தள்ளப்பட்டது எனலாம்.

ஜே.வி.பியைப் பொறுத்தவரை இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற பேச்சுக்கே இடமில்லை. இலங்கை தனித்து பௌத்த சிங்கள நாடு. இங்கு தமிழர்கள் வந்தேறுகுடிகள் எனவே அவர்கள் ஆளப்படவேண்டியவர்கள் என்பதே அவர்களின் தத்துவம்.

ஆகவே இத்தகைய கட்சியின் கோரிக்கைகள் ஒருபோதும் நின்றுபோகமாட்டாது.

- விடுதலைப் புலிகளை தடைசெய்யவேண்டும்.
- யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முடிபுறுத்த வேண்டும்.
- நோர்வேயை வெளியேற்ற வேண்டும்.
- ஐ.நா.உள்ளிட்ட சர்வதேச அரச சார்பற்ற தொண்டரமைப்புக்களை வெளியேற்ற வேண்டும்.

என பல கோரிக்கைகளை ஜே.வி.பி முன்வைத்துள்ளது.

இந்தக் கோரிக்கைகள் அனைத்தும் இனப்போரைத் தூண்டுவதாகவே அமைகின்றது. இதைவிட விடுதலைப் புலிகளுக்கு எதிராக போர் நடத்தவேண்டும் என்பதிலும் ஜே.வி.பி பகிரங்கமான கருத்துக்களை முன்வைத்துள்ளது.

இந்நிலையில் விடுதலைப் புலிகளை தடை செய்து ஜே.வி.பியை குளிர்மைப்படுத்தி, மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றினாலும் அடுத்த கட்டமாக, அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில், ஜே.வி.பி அடுத்த கட்டமாக அரசை அதட்டும். அதன்போது அரசு எதனை நிறைவேற்றப்போகிறது?

ஆக ஜே.வி.பியின் ஆதரவைப் பெறுவதற்காக அரசு எத்துணை தூரம் இறங்கிச் சென்றாலும் அது ஜே.வி.பியை திருப்திப்படுத்தாதென்பதுடன், இனப்பிரச்சினையை மேலும் மோசமாக்கும் என்பதே உண்மையாகும்.

## மரணத்தின் வாயலில் மஹிந்த -பிரபா கடிதம் சபையில் அமைச்சர் மேர்வின் சில்வா தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது சகோதரர்களும் மற்றும் 15 அமைச்சர்களும் மரணத்தின் தறுவாயில் இருப்பதாகக்கூறி பிரபாகரன் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளதாக தொழிலமைச்சர் மேர்வின் சில்வா சபையில் தெரிவித்தார். வரவு -செலவுதிட்ட இரண்டாம் வாசிப்பு மீதான 6ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்,

பிரபாகரனுக்கு சான்றிதழ் பெற்றுக் கொடுக்க ஜப்பான் முற்பட்டது. அதற்கு ஐக்கிய தேசியக்கட்சித் தலைவரும் ஒத்துழைத்தார். தேசத்தைக் காப்பாற்றுவதற்காகவே அரசாங்கத்தை நாங்கள் கைப்பற்றினோம். இந்த வரவு-செலவுத்திட்டம் வெறுமனே இலக்கங்களை மாத்திரமே கொண்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

இவர்கள் மட்டை அடிக்கின்றனர். மட்டைக்கு இவர்களைப் பற்றித்தெரியாது. நாட்டின் நெருக்கடியைப்போக்க ஒன்று சேருங்கள்; விமர்சிக்காதீர்கள். மீண்டும் ஒரு பொதுத்தேர்தல் வருமாக இருந்தால் எவ்வளவு செலவு ஆனாலும் அந்தத் தேர்தலை எதிர்கொள்ள நாங்கள் தயார்.

மரணத்தின் வாயில் நீங்கள் இருக்கின்றீர்கள் என்று பிரபாகரன் கடிதம் எழுதியுள்ளார். நாட்டை பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே ராஜபக்ஷ பரம்பரை இந்த அவலத்திற்கு முகம் கொடுத்துள்ளது.

ராஜபக்ஷ பரம்பரை இல்லை என்றால் விஜயதாஸ ராஜபக்ஷ எம்.பி.இன்று எங்கே இருந்திருப்பார். ராஜபக்ஷ குடும்பத்தை விரட்டி அடிக்கமுடியாது. மகிந்த ராஜபக்ஷ மிகவும் பொறுமையானவர். நாட்டின் ஒற்றுமைக்காகவே செயற்பட வேண்டும். முதிர்ச்சியடைந்த அரசியல்வாதிகள் சிந்திக்கவேண்டும். (அ-5)

## சொத்துக்களை முடக்கியமை தொடர்பாக அமெரிக்க அரசிற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கஆலோசனை

### தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் திட்ட இயக்குநர் ஜோன் பி.பி.சிக்கு செவ்வி

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் சொத்துக்கள் முடக்கப்பட்டமையினால் நிவாரண நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பாரிய நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சொத்துக்கள் முடக்கப்பட்டமை தொடர்பாக அமெரிக்க அரசாங்கத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவதற்கு ஆலோசிக்கப்பட்டு வருகின்றது என்று தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் திட்ட இயக்குநர் ஜோன் கிறிஸ்ரி தெரிவித்தார். அமெரிக்க அரசாங்கம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சொத்துக்களை முடக்கியுள்ளமை தொடர்பாக அவர் பி.பி.சி செய்தி சேவைக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது,

அமெரிக்க அரசாங்கத்தின் குற்றச்சாட்டில் எவ்விதமான உண்மையும் இல்லை என்பதுடன் முற்று முழுதாக உண்மைக்கு புறம்பான தகவல்களே ஊடகங்களில் வெளியாகியுள்ளன. தமிழர் புனர்வாழ்வு கழகத்தை பொறுத்த மட்டில் நிவாரண புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

பொறுப்புக்கூறும் வகையிலும் மிகவும் வெளிப்படையாகவும் செயற்பாடுகளைமுன்னெடுத்து வருகின்றது. நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு நிதி வழங்குகின்ற நிறுவனங்கள் உள்ளிட்ட பலரும் குறிப்பாக பாதிக்கப்படுகின்ற மக்கள் திருப்தியடைகின்றனர்.

இலங்கை அரசாங்கம் தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் செயற்பாடுகளை முடக்குகின்ற வகையிலான தீவிரமானபிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது. இவ்வாறான பிரசாரங்களை நம்பியதன் அடிப்படையிலேயே இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக கருதுகின்றோம். விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள், தொடர்பு சாதனங்கள் மற்றும் பிரசார சாதனங்களை எங்களது அமைப்பு தருவித்து வழங்கும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டதாக அமெரிக்க தூதரகத்தினால் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. இது வெறுமனே செய்திகளாக மட்டுமே வெளிவந்துள்ளது. எனினும் அதற்கான ஆதாரங்கள் எவையும் முன்வைக்கப்படவில்லை.

அமெரிக்க தூதரகம் குற்றஞ்சாட்டியுள்ளது போல் எங்களது அமைப்பு ஈடுபடுவது இல்லை. அதற்கான தேவையும் இல்லை. பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு மனிதாபினான சேவைகளை செய்வதே எங்களது அமைப்பின் முழுமையான நோக்கமாகும்.

மனிதாபிமான சேவைகளுக்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசாங்கத்தினால் விருதொன்றும் வழங்கப்படவிருந்தது. அத்துடன் அரசாங்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை அமைப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளுடன் நாங்கள் சேவைகளை முன்னெடுத்தோம். புனர்வாழ்வுக் கழகத்தின் நிதி ஏற்கனவே முடக்கப்பட்டதனால் கழகம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருந்தது. சமூக பொருளாதார நிலையில் மக்கள் பாதிக்கப்படுகின்றபோது மக்கள் மனதளவில் பாதிக்கப்பட்டுவிடாது உடனடியாகவே நிவாரண உதவிகளை வழங்க வேண்டும். அதுவே எங்களுடைய கடமையாகும். அவ்வாறான நெருக்கடியான சந்தர்ப்பங்களின் போதெல்லாம் அரசாங்கம் எங்களுக்கு எதிராகவே செயற்படுகின்றது. அரசாங்கத்தின் அங்கீகாரத்தின் மூலமாகவே நிறுவனத்தின் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கு சர்வதேச நிறுவனங்களும் சாட்சிபகர்கின்றன. எனினும் அமெரிகக அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு எதிராக அமெரிக்காவில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஆலோசனைகளை மேற்கொண்டு வருகின்றது என்றார். (அ-5)

## ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் விசேட புலமைப்பரிசில் கொடுப்பனவு

(கொழும்பு)

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினால் விசேட புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக புலமைப்பரிசில் உத்தியோகத்தர் திருமதி வை. கே. மடிகசேகர தெரிவித்தார்.

இந்நிதியத்தில்அங்கத்துவம் வகிக்கும் உத்தியோகத்தர்களின் பிள்ளைகள் 2 ஆயிரத்து 500 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாவட்ட மட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவர்கள் இதற்கென தெரிவு செய்யப்படவுள்ளனர். இது தொடர்பான விண்ணப்பப் படிவங்கள் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய தலைமை அலுவலகத்திலும் பிரதேச மற்றும் மாவட்ட அலுவலகங்கள் மூலமாகவும் விநியோகிக்கப்படுகின்றன. இவ்விண்ணப்பங்களை தபால் மூலமாகவும் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கொழும்பு-5, நாரஹேன்பிட்டியில் அமைத்துள்ள ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தலைமையகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ-5)

## விடுதலைப்புலிகள் தொடர்பாக இந்திய அரசின் கொள்கையில் மாற்றம் எதுவும் இல்லை

(சென்னை)

தடை செய்யப்பட்ட இயக்கமான விடுதலைப்புலிகள் மீதான நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்று மத்திய அரசு தெளிவுப்படுத்தி உள்ளது.

ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணிய சுவாமி அண்மையில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கு விடுதலைப்புலிகள் மீதான மத்திய அரசின் நிலைப்பாடு மற்றும் கொள்கை குறித்து விளக்கம் கேட்டு கடிதம் எழுதி இருந்தார்.

இதற்கு மத்திய வெளியுறவுத்துறை செயலாளர் சிவசங்கர் மேனன் சுப்பிரமணியசுவாமிக்கு கடந்த 13ஆம் திகதி பதில்கடிதம் ஒன்றை எழுதி உள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது, தடைசெய்யப்பட்ட இயக்கமான விடுதல்லைப்புலிகள் மீதான மத்திய அரசின் கொள்கையில எந்தமாற்றமும் இல்லை.

அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு இலங்கை அரசை அவ்வப்போது மத்திய அரசுமுறைப்படியாககேட்டுக்கொண்டுள்ளது. இதற்கு பதிலளித்துள்ளஇலங்கைஅரசு இந்தியாவின் கோரிக்கை குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளது. இவ்வாறு சிவசங்கர் மேனன் அந்த கடிதத்தில் கூறியுள்ளார்.

ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணிய சுவாமியின் கடிதத்திற்கு வெளியுறவுத்துறை அமைச்சர் முகர்ஜி இவ்வாறு பதிலளித்திருப்பதாக பத்திரிகை செய்தி ஒன்றில் கூறப்பட்டுள்ளது.(அ-5)

## தேசிய வாசிப்பு மாதப் பரிசளிப்பு விழா

சாவகச்சேரி பிரதேச சபை, சரசாலைச் பொது நூலகத்தினரின் தேசிய வாசிப்பு மாதப்பரிசளிப்பு விழா இன்று முற்பகல் 9.30 மணிக்கு மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் கு.ந. பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக அபிவிருத்தி மன்ற தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட நூலகர் செல்வி அ.ஸ்ரீகாந்தலட்சுமியும் சாவகச்சேரி நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகமும், கௌரவ விருந்தினர்களாக யாழ். மட்டுவில் கமலாசனி வித்தியாலய அதிபர் செ. பேரின்பநாதனும் ஓய்வு பெற்ற அதிபர் நா.நல்லதம்பியும் கலந்து கொள்ளவுள்ளனர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (அ)

## தீவக வலயத்தில் அதிபர் வெற்றிடம்

தீவகக் கல்வி வலயத்தைச் சேர்ந்த மண்டைதீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திற்கு அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அதிபர் தரம் 2-II,IIIக்கு மேற்பட்டவர்களும் ஆசிரியர் தரம்2-IIக்கு மேற்பட்ட தரத்தைச் சேர்ந்தவர்களும் தமது பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை வலயக் கல்விப் பணிப்பாளர், தீவக வலயம், வேலணை என்ற முகவரிக்கு 03.12.2007 க்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு தீவகக் கல்வி வலயப் பணிப்பாளர் ஏ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

இதேவேளை தீவகக் கல்வி வலயத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார். (ந-5)

## இலங்கைத் தமிழர்கள் இருவர் தமிழகத்தில் உயிரிழப்பு

(சென்னை)

தமிழக அகதிமுகாமில் தங்கியிருந்த இரண்டு இலங்கைத் தமிழர்கள் வெவ்வேறு சம்பவங்களில் உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஈ.சிவானந்தராஜா (வயது-52) என்பவரும் ஏ.லோகேந்திரன் (வயது-27) என்பவருமே உயிரிழந்திருப்பதாகத் தமிழகக் காவல் துறையினர் அறிவித்துள்ளனர்.

இராஜபாளையத்திற்கு அருகிலுள்ள கண்டியபுரம் அகதிமுகாமிலிருந்த ஈ.சிவானந்தராஜா என்பவர் அங்கிருந்த இருவராலேயே வெட்டிக் கொலை செய்யப்பட்டதாகவும் சிவகாசி அருகேயுள்ள அன்னைக்குட்டம் அகதிமுகாமிலிருந்த ஏ.லோகேந்திரன் வாகன விபத்தில் உயிரிழந்ததாகவும் தமிழகக் காவல் துறையினர் தெரிவித்துள்ளனர். (ந-5)

## திருமதி எலீனா ஜெயவர்த்தன காலமானார்

(கொழும்பு)

இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் உள்ள முன்னாள் காலஞ்சென்ற ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் பாரியார் திருமதி எலீனா ஜெயவர்த்தன நேற்றுக் காலை காலமானார்.

94 வயதான அவர் எவ்வித அரசியல் சர்ச்சைகளுக்குள்ளும் சிக்காமல் கண்ணியமான பெண்மணி என்ற பெயருடன் மிகவும் எளிமையாக வாழ்ந்து காட்டியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அவரது இறுதி அஞ்சலி நிகழ்வுகள் இன்று கொழும்பு பொரளை மயானத்தில் இடம்பெறும் என குடும்பத்தினர் அறிவித்துள்ளனர். (ந-5)

## பழைய மாணவர் நலன்விரும்பிகள் பொதுக் கூட்டமும் ஒன்றுகூடலும்

(யாழ்ப்பாணம்)

யாழ்/இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் நலன்விரும்பிகள் பொதுக்கூட்டமும் ஒன்றுகூடல் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். (ந)

## ஜனாதிபதி மகிந்த யப்பான் செல்வார்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் டிசம்பரில் யப்பானுக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

டிசம்பர் 8 ஆம் திகதி முதல் நான்கு நாள்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யப்பானில் தங்கியிருப்பார் என்று யப்பானிய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த விஜயத்தின்போது டிசம்பர் 10 ஆம் திகதி யப்பானியப் பிரதமர் ஜஷூஓ புகுடாவை சந்தித்து இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலை குறித்து விளக்குவார் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் அவர் அங்கு இடம்பெறும் கூட்டம் ஒன்றிலும் உரையாற்றுவார். எனினும் இந்த விஜயம் குறித்து மேலதிக விபரங்கள் வெளியிடப்படவில்லை. (ந-5)

## இலவச மருத்துவ முகாம்

நீர்வேலி காமாட்சி அம்பாள் சனசமூக நிலைய ஏற்பாட்டில் அச்சுவேலி அரிமாக் கழகமும் உரும்பிராய் அரிமாக் கழகமும் இணைந்து நடாத்தும் மருத்துவமுகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சயரோகப் பரிசோதனை, இரத்த அழுத்தம், கண் பரிசோதனை, இலவசக் கண்ணாடி வழங்குதல் என்பன இதில் இடம்பெறும். (ந-5)

## பங்களாதேஷை தாக்கிய...

நேற்று அறிவித்துள்ளது. இதேவேளை சூறாவளி தாக்கியபோது கடலில் 150 படகுகளில் மீன வர்கள் இருந்தனர் என்றும் இவர்களின் கதி குறித்து எதுவும் இதுவரை தெரியவில்லை என்றும் நேற்று மாலை அங்குள்ள சர்வதேச ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சூறாவளியில் சிக்கியுள்ள நூற்றுக் கணக்கான மீனவர்கள் இதுவரை கரைக்குத் திரும்பவில்லை என்றும் பங்களாதேஷ் அரசாங்கம் அறிவித்துள்ளது.

சுயாதீன தகவல்களின்படி இந்தச் சூறாவளியில் ஆயிரத்து 600 பேர் இதுவரை உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதைவிட சூறாவளி தாக்கிய சுந்தரர்பன்ஸ் தீவுக்கு நேற்று மதியம் வரை மீட்புப் பணியாளர்கள் செல்லவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தத் தீவுகளில் வசிக்கும் மக்களுக்கு உதவுவதற்குத் தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றோம் என்று மீட்புப் படை அதிகாரிகள் நேற்றுத் தெரிவித்தனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் போர்க் கால அடிப்படையில் மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தென்மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் இராணுவ ஹெலிகொப்டர்கள் மூலம் தற்காலிக கூடாரங்கள் மற்றும் உணவுப் பொட்டலங்கள் போடப்படுகின்றன. இதேவேளை தலைநகர் டாக்கா உள்ளிட்ட பெரும்பாலான பகுதிகளில் 2-வது நாளாக நேற்றும் மின் விநியோகம் பாதிக்கப்பட்டது.

இதனால் நாடு முழுவதும் இருளில் மூழ்கிக் கிடக்கின்றது. மேலும் குடிநீர் விநியோகம், போக்குவரத்து, தொலைபேசிச் சேவை ஆகியவைகளும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. புயல் பாதித்த பல பகுதிகளில் தொலைபேசியில் தொடர்பு கொள்ளமுடியவில்லை என்று அரசு செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார். (ந-5)

## புலிகளைத்...

பாலும் இந்தவாரம் இந்த கலந்துரையாடல் இடம்பெறக்கூடுமென விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளை தடைசெய்தாலும் அது சமாதானப் பேச்சுவார்த்தையை எந்த வகையிலும் பாதிக்காது என்றும் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்கு வரலாம் என்பதுமே அரச உயர்மட்டத்தின் நிலைப்பாடு என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ந-5)

## ஜனாதிபதியுடனும் ரணிலுடனும்...

முக்கிய சந்திப்பு ஒன்று இடம் பெற்றது.

சுமார் 2 மணித்தியாலங்களாக இடம் பெற்ற இந்தச் சந்திப்பில் விஜயதாச ராஜபக்ஷ முன்வைத்த கோரிக்கைகள் குறித்து பரிசீலிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. இந்தச்சந்திப்பு சுமுகமாக முடிவுற்றதையடுத்தே நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ மீண்டும் ஆளுந்தரப்புடன் இணைந்திருப்பதான தகவலை முக்கிய அமைச்சர் ஒருவர் வெளியிட்டார்.

இது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர் ஒருவரிடம் வினாவிய போது, நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ மீண்டும் ஆளுந்தரப்புடன் இணைந்திருப்பதான தகவலில் எவ்வித உண்மையுமில்லை என்றும் அவர் தனது நிலைப்பாட்டை விளக்குவதற்கே அலரி மாளிகைக்குச் சென்றார் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பிலும் விஜயதாச ராஜபக்ஷ எதிரணிக்கு ஆதரவாகவே வாக்களிப்பார் என்றும் தெரிவித்தார். இந்தத் தகவல்களைத் தொடர்ந்து நேற்று மாலை 5 மணியளவில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ திடீர் சந்திப்பொன்றினை நடத்தினார்.

இந்தச் சந்திப்பில் மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரியாராட்சி ஆகியோரும் கலந்து கொண்டனர் என்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. ரணிலுடனான இந்தச் சந்திப்புக் குறித்து தெரியவந்ததும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவசர கடிதம் ஒன்றை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷவுக்கு அனுப்பினார்.

அக் கடிதத்தில் ஜனாதிபதியின் முக்கிய செய்தி ஒன்று இருந்ததாகத் தெரிவிக்கப்பட்ட போதும் அது குறித்த விபரங்களை அறிந்து கொள்ள முடியவில்லை. எனினும் இந்தச் சந்திப்புக்கள் குறித்தும் ஆளுந்தரப்புடன் இணைவது குறித்தும் வெளியாகிய தகவல்களின் உண்மைத் தன்மை குறித்தும் அறிந்து கொள்ள முடியவில்லை. (ந-5)

## ஆளுந்தரப்...

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்களான லக்ஸ்மன் செனவிரத்ன, பாலித ரங்க பண்டார மற்றும் காமினி அபயரட்ண ஆகியோர் கலந்து கொண்டனர். எனினும் இந்த இரகசிய பேச்சு வார்த்தை வெற்றி பெற்றதா? என்பது குறித்து எதுவும் தெரியவரவில்லை. (ந-5)

## ஹலோ ரெஸ்ட்...

தங்கராஜா சுஜீவன் (வயது- 23) என்ற ஹலோ ரெஸ்ட் பணியாளரே சுட்டுக் கொல்லப்பட்டவர் ஆவார். ஆலயத்திற்குச் சென்று விட்டு வீடு திரும்பிய குறித்த தொண்டு நிறுவனப் பணியாளர் அயல் வீட்டிலிருந்த தனது தாயாரிடம் சென்றபோது பின் தொடர்ந்து சென்ற ஆயுததாரிகள் அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்திய யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா, பிரேதபரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ந-5)

## ஈழ மக்களின் தாயகக் கனவு நிறைவேற...

மற்றப்படி இந்த இரங்கல் கவிதையை முன்வைத்து எழுப்பப்படும் சர்ச்சைகள் பற்றி நான் கூறவில்லை.

**கேள்வி:** தமிழகத்திடமும் இந்தியாவிடமும் நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?

**பதில்:** எமது மக்களின் நீண்டகால விடுதலைப் போரின் நியாயங்களை புரிந்து கொண்டு ஈழமக்களின் தாயகக் கனவுநிறைவேற துணையாக இருக்கவேண்டும் என்பதே எங்களின் எதிர்பார்ப்பு.

**கேள்வி:** புலித் தலைவர்களின் வசிப்பிடங்கள் எங்களுக்குத் தெரியும்... அவர்களை ஒவ்வொருவராகக் கொல்வோம் என்று இலங்கை அரசு சொல்லியிருக்கின்றதே?

**பதில்:** எமது 30 ஆண்டுகால ஈழ விடுதலைப் போரில் இவ்வாறான அறிவிப்புக்களை பலமுறை செய்திருக்கின்றார்கள்.

எங்கள் முக்கிய பொறுப்பாளர்கள் அனைவரையும் கொல்லும் வல்லமை தனக்கிருப்பதாக இலங்கை அரசு சொல்வது பகல் கனவுதான்.

**கேள்வி:** நான்கு வருட சமாதானப் பேச்சுவார்த்தை காலத்தில் இருதரப்பிலும் ஏராளமான உளவாளிகள் ஊடுருவியிருப்பதாகவும் அப்படி ஊடுருவிய உளவாளிதான் தமிழ்ச்செல்வனின் துல்லியமான கொலைக்கு காரணம் என்று கூறப்படுகின்றதே?

**பதில்:** தமிழ்ச்செல்வன் படுகொலை அப்படி நடந்ததாக நாங்கள் கருதவில்லை.

**கேள்வி:** அன்ரன் பாலசிங்கம், தமிழ்ச்செல்வன் ஆகியோருக்குப் பிறகு சர்வதேச அளவில் உங்கள் அமைப்பிற்காக பணியாற்ற சரியான ஒரு பிரதிநிதி இல்லை என்று சொல்லப்படுகின்றதே?

**பதில்:** எமது தேசியத் தலைவர் ஆழமான திட்டங்கள், சிந்தனைகளில் அடிப்படையிலேயே பல்வேறு துறைகளிலும் பொறுப்பாளர்களை வளர்த்து வருகிறார். அவ்வாறானதொரு கட்டமைப்பின் மூலமே எமது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும் போராட்டம் என்றால் இழப்புக்களையும் எதிர்பார்த்துத்தான் இருக்கின்றோம்.

எத்தனை இழப்புக்கள், இடர்பாடுகள் வந்தாலும் அவற்றை நிரப்ப தயார் நிலையில் தான் எங்கள் அமைப்பு எங்கள் தேசியத் தலைவரின் தலைமையில் அணிவகுத்து நிற்கிறது.

துயர் சூழ்ந்த வேளைகளில் அதை வெற்றியின் படிக்கட்டுக்களாக நாங்கள் மாற்றியிருக்கின்றோம். இனியும் அது தொடரும்...

என்று பா.நடேசன் தெரிவித்துள்ளார். (ந-5)

## நவாலியில்...

அதேயிடத்தைச் சேர்ந்த 4 மாதக் குழந்தையின் தந்தையான கந்தையா கோணேஸ்வரன் (வயது-37) என்ற வர்த்தகரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

குறித்த வர்த்தக நிலையத்தில் எவரும் இல்லாத வேளையிலேயே வர்த்தகர் சுட்டுக் கொல்லப்பட்டார் என விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன், பிரேத பரிசோதனைக்காகச் சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு மானிப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ந-5)

## வ.செ.திட்ட ...

வியலாளர் மாநாட்டில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க கருத்துத் தெரிவிக்கையில், வரவு -செலவுத் திட்டத்தை ஆதரிப்பதற்காக நாம் விதித்த நிபந்தனைகள் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எமக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கின்றார். அந்தக் கடிதத்தில் எமது நிபந்தனைகள் குறித்துக் கலந்துரையாடுவதற்கு வருமாறு அவர் கோரியுள்ளார்.

ஆனால் நாங்கள் சமரசம் பேசுவதற்கு தயாராகவில்லை. நாங்கள் எமது பதில் நடவடிக்கையை மட்டுமே வெளிப்படுத்துவோம். எங்களுடைய கோரிக்கைகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்பாரென நம்புகின்றோம்.

நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மையளிக்கக் கூடிய வகையில் எமது நடவடிக்கை அமையும் என்றார். இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்சவும் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவும் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுவேன் என்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அதட்டலுக்குப் பயந்தே ஜே.வி.பி. மேற்போந்த முடிபை எடுத்து தமது 39 ஆசனங்களைப் பாதுகாத்துள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்துக் கூறியுள்ளனர். (ந-5)


## மரண அறிவித்தல்

### பொன்னையா நடராசா

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் சங்கரத்தை-வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா நடராசா 17.11.2007 நேற்று கொழும்பில் சிவபதமடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி பொன்னையாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற கனகேஸ்வரியின் அன்புக் கணவரும் சந்திரபவானி (லண்டன்), கஜபாலினி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரிதிவிராஜ் (லண்டன்), மகேந்திரராஜா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் டிலன், நிஷாந், டேமியன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கானை வீதி,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

தகவல்;
சந்திரபவானி
(மகள்)

(சி-552)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ, கனடா PR உடைய 1981இல் பிறந்த 12இல் செவ்வாய், பூசம் 2ஆம் பாதம் 28¾ கிரகபாவம் உடைய மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

தொடர்பு: 021 222 3772 (611)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.11.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.